# சந்நிதியான்

## அற்புதங்கள்

## பாகம் நான்கு



ந. அரியரத்தினம்

2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# சந்நிதியான்

## அற்புதங்கள்

### பாகம் நான்கு

ந. அரியரத்தினம்

2013
கனடா

289486

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
R94.5

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | சந்நிதியான் |
| விடயம் | : | அற்புதங்கள் (பாகம் நான்கு) |
| ஆசிரியர் | : | திரு. ந. அரியரத்தினம் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு 17-08-2013 |
| பதிப்புரிமை | : | ஆசிரியர்க்கு |
| பக்கம் | : | 80 |
| அச்சுப்பதிப்பு | : | விவேகா அச்சகம்-கனடா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய 2013 ஆம் ஆண்டு வருடாந்த உற்சவத்தில் முருகப்பெருமான் வேலவனாக வீதி உலா வருவதற்கு ஆயத்தமாக உள்ள அருள்காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே........................ பக்கம்


| | | |
|---|---|---|
| முன்னுரை - | | 5 |
| ஆசிச்செய்திகள் | - | 9-12 |
| சந்நிதியான் - | ஒன்று | 13 |
| சந்நிதியான் - | இரண்டு | 26 |
| சந்நிதியான் - | மூன்று | 31 |
| சந்நிதியான் - | நான்கு | 38 |
| சந்நிதியான் - | ஐந்து | 46 |
| சந்நிதியான் - | ஆறு | 51 |
| சந்நிதியான் - | ஏழு | 65 |
| சந்நிதியான் - | எட்டு | 71 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமர்ப்பணம்

எமக்காக மட்டுமன்றி பிறருக்காகவும் வாழ்வதே உண்மையான வாழ்க்கையாகும். இத்தகைய நிலைக்கு அடியேனாகிய என்னை ஆளாக்கிய எனது தாய், தந்தை இருவருக்கும் இந்நூலை காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஞானச்சுடர் என்ற சமயச்சஞ்சிகையை 1998ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் மாத வெளியீடாக வெளியீடு செய்து வருகின்றது.

இந்த ஞானச்சுடர் சஞ்சிகையில் சந்நிதியான் என்ற தலைப்பில் கலியுகக் கந்தன் சந்நிதி முருகன் அடியவர்களுக்கு நிகழ்த்தி வருகின்ற அற்புதங்களை சந்நிதியான் கருணையுடன் கட்டுரைகளாக தொடர்ந்து 2011ஆம் ஆண்டு வரை மாதாமாதம் பதின்நான்கு வருடங்கள் எழுதி வந்துள்ளேன். 2011ஆம் ஆண்டுக்குப் பின்பு ஞானச்சுடர் சஞ்சிகையில் இடம் பெறாவிட்டாலும் இன்றுவரை தொடர்ந்து சந்நிதியான் அற்புதங்களை எழுதி வருகின்றேன்.

1998ஆம் ஆண்டிலிருந்து மாதாமாதம் ஞானச்சுடரில் வெளிவந்த கட்டுரைகளை வருடரீதியாகத் தொகுத்து பாகம் ஒன்று, பாகம் இரண்டு, பாகம் மூன்று என மூன்று பாகங்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன. பாகம் மூன்று தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் 2012ஆம் ஆண்டு வெளியீடு செய்யப்பட்டது.

சந்நிதியான் பாகம் நான்கு என்ற இந்தநூல் அதன் தொடர்ச்சியாக 17-08-2013இல் கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வெளியீடு செய்யப்படுகிறது. இந்த மலரில் இடம்பெறும் கட்டுரைகள் ஞானச்சுடர் மலரில் இடம்பெறாத புதிய கட்டுரைகளாகும். அத்துடன் உலகத்தில் எந்த மூலையில் அடியார்கள் வாழ்ந்தாலும் சந்நிதியான் தனது மெய்யடியார்களுக்கு அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டே இருக்கின்றான் என்பதை இக்கட்டுரைகளை வாசிக்கும்பொழுது அடியார்கள் உணர்ந்து கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துமக்கள் குறிப்பாக வடபகுதி மக்கள் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனை பரம்பரை பரம்பரையாக வழிபாடு செய்து வருபவர்கள். ஆனாலும் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையால் கடல் கடந்து புலம்பெயர்ந்து வாழ்ந்து வருபவர்கள் மட்டுமன்றி எமது நாட்டிற்குள் உள்ளவர்கள் கூட நினைத்த பொழுதில் சந்நிதியானைச் சென்று வழிபடமுடியாத யுத்த சூழ்நிலைகள் அங்கே நிலவி வந்தது. இவ்வாறான காலகட்டத்தில் எம்மால் வெளியீடு செய்யப்பட்டு வருகின்ற இந்த ஞானச்சுடர் சஞ்சிகையையும் இதில் சந்நிதியான் என்ற தலைப்பில் அடியேனால் எழுதப்பட்டு வரும் கட்டுரைகளும் இலங்கையிலும் உலகம் முழுவதும் பரந்து வாழும் சந்நிதியானது அடியவர்களை அவனது ஆலயத்திற்கு அழைத்துச் செல்வது போன்ற உணர்வையும் அவனது அருளைப் பெறுவதற்குமான ஒரு மானசீகமான தொடர்பையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது எனக் கூறுவதில் தவறு இல்லை எனக் கருதுகிறேன்.

சந்நிதியான் என்ற தலைப்பில் வெளிவருகின்ற இந்தக் கட்டுரைகளை எல்லாம் அடியேன் எழுதுகின்றேன் எனக் கூறுவது பொருத்தமில்லை. எனக்குள் இருந்து செயற்படுகின்ற ஏதோ ஒரு சக்தியின் துணையுடன் தான் இவற்றை எல்லாம் அடியேனால் தொடர்ந்து எழுத முடிகின்றது என்பதை என்னால் நன்கு உணர முடிகின்றது. அடியேனும், அடியேனது துணைவியாரும் மட்டுமல்ல, எமது இருவரது மூதாதையர்களும் சந்நிதி ஆலயத்துடன் நெருக்கமான தொடர்புள்ளவர்களாக வாழ்ந்து வருகின்றனர். உதாரணமாக ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் மூலஸ்தானத் தீர்த்தக் கிணற்றினையும் ஆலய வாசற் கதவினையும் எனது தாயாரின் பேரனான வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த வ. முருகுப்பிள்ளை அவர்கள் தனது திருப்பணி உபயமாக அமைக்கும் பேற்றினைப் பெற்றுள்ளார்கள். இதற்குச் சான்றாக அவருடைய நாமம் தீர்த்தக் கிணற்றின் கட்டில் பொறிக்கப்பட்டிருப்பதை நாம் இன்றும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோல வல்வை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் கந்தசஷ்டிக் காலத்தில் சூரன்போருக்குப் பயன்படுத்தப்படும் பிரமாண்டமான சூரனையும் இந்தியாவிலிருந்து கொண்டு வந்து அவரே உபயமாக வழங்கியுள்ளார். சூரன் பீடத்தில் எனது பூட்டனாராகிய முருகுப்பிள்ளையின் பெயரும் அதற்கு உதவியவர்களது பெயர்களும் 01-10-1898இல் உபயமாக வழங்கப்பட்ட காலக்குறிப்பும் இடம் பெற்றுள்ளது. இதே போன்று எனது தாயார் திருமதி நடராசா வள்ளியம்மாள் வல்வை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் பன்னிரண்டாம் உற்சவத்தின் பொழுது இடம்பெறும் சிவன் பார்வதி திருக்கல்யாணத்திற்கான கல்யாண மண்டபத்தை தனது உபயமாக அமைத்து எமக்கும் வழிகாட்டியுள்ளார்.

இவ்வாறான ஒரு ஆலயத்திருப்பணிப் பாரம்பரியம் எமது மூதாதையருக்கு இருந்து வந்தது மட்டுமன்றி ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் மீது ஒரு மானசீகத் தொடர்பு சிறு வயதிலிருந்தே அடியேனது உள்ளத்துக்குள் இருந்து வந்ததையும் என்னால் நன்கு உணர முடிகின்றது. எல்லாமே சந்நிதியானின் பெருங்கருணை.

இக்கட்டுரைகளில் இடம் பெறுகின்ற நிகழ்வுகள் அனைத்தும் சந்நிதியானது உண்மைச்சம்பவங்கள் என்பதால் உணர்வுகளை மிகைப்படுத்தக் கூடிய சொற்களோ வசனங்களோ இங்கே பயன்படுத்தப்படவில்லை. பாமரமக்களும் வாசிக்கக் கூடியதான இலகுவான இயல்பான சொற்பதங்களே பயன் படுத்தப்பட்டுள்ளன.

சந்நிதியானது கட்டுரைகளை தொடர்ந்து எழுதுவதற்கு ஊக்கமளித்துக் கொண்டிருக்கும் வாசகர்களான அடியார்கள் பெருமக்களுக்கும் எனது அன்றாட வாழ்க்கையில் கணிசமான நேரத்தை பயன்படுத்துவதற்கு அனுமதித்து ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கும் எனது குடும்பத்தினருக்கும், நன்றிகளை தெரிவித்துக் கொள்வது எனது கடமையாகும். இதேபோன்று இந்நூலை கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வெளியீடு செய்வதற்கு எல்லாவகையிலும் அனுசரணை வழங்கிய கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய பிரதம குருக்கள் பொ. புவனேந்திரன் ஐயர் அவர்களுக்கும் அழகாகவும் கச்சிதமாகவும் அச்சிட்டு வழங்கிய விவேகா அச்சகத்தினருக்கும் எனது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது செயற்பாடுகள் அனைத்திற்கும் துணையாக இருந்து வழிப்படுத்துகின்ற சந்நிதி முருகனே இந்நூலை கனடாவில் வெளியீடு செய்வதற்கும் திருவருள் புரிந்துள்ளான். சந்நிதியானது திருவருள் என்றும் எம் அனைவருக்கும் கிடைப்பதற்கு நாம் அனைவரும் அவனது திருப்பாதங்களைப் பற்றி வணங்குவோமாக.

ஓம்முருகா!

ந. அரியரத்தினம்
தொண்டைமானாறு
இலங்கை

65 தொன்கிளிப் பார்க்
ரொறன்ரோ, கனடா
416-425-4877



ஜேர்மன் சுவாமிகள் உட்பட சந்நிதியில் சித்தர்கள் 1958



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குருபாதம்

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக - நல்லை

ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கிய

# அருளாசிச் செய்தி

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளிவரும் ஞானச்சுடர் மாத சஞ்சிகையின் ஆசிரியராகவும் பாடசாலை அதிபராகவும் பேரவையினுடைய வளர்ச்சிக்கு அயராது தொழில் செய்யும் திரு. ந. அரியரத்தினம் அவர்கள் சந்நிதியான் என்கின்ற தொடர் கட்டுரையை எழுதி வெளியிட்டுக் கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. ஈழத்தின் பெருமையை நிலை நாட்டும் பல ஆலயங்களுள் சந்நிதி முருகனுடைய ஆலயம் தனித்துவமானது. உடல்நோய், உளநோய் அனைத்தையும் தீர்க்கும் முருகனாக வேண்டுவோர் வேண்டுவதை ஈயும் இறைவனாக, அன்றும் இன்றும் என்றும் அன்னதான கந்தன் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றான். அவனுடைய சிறப்பையும் ஆலய வரலாற்றையும் அறியவேண்டியது அனைவரதும் அவாவாக உள்ளது. அதனை ஈடுசெய்யும் பொருட்டு திரு. ந. அரியரத்தினம் அவர்கள் மிகவும் தெளிவாகவும் அனைவரும் விளங்கிக்கொள்ளும் வகையிலும் இந்நூலை எழுதிக் கொண்டு வருவது எல்லோராலும் வரவேற்கத்தக்கதாகும். ஆசிரியர் அரியரத்தினம் அவர்களின் தொண்டு மேலும் சிறப்படைய வாழ்த்துகின்றோம். நூல் சிறப்பாக வெளிவந்து முருகனுடைய அருள் அனைவருக்கும் கிடைப்பதாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லூர்

யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆற்றங்கரை வேலழகன் அற்புதங்கள்

பொன்னுத்துரை ஐயர்

புவனேந்திரன் ஐயர்

# ஆசிச் செய்தி

ஆசியாவின் முத்தாக விளங்கும் ஈழ மணித் திருநாட்டின் வடகரையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்களுடன் ஈழத்தின் அறுபடை வீடுகளில் முதன்மையாக விளங்குவது ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமாகும்.

பக்தர்களின் பிணி தீர்க்கும் வேலவனாக, அன்னதானக் கந்தனாக, கல்லோடைக்கந்தனாக, காவடிக் கந்தனாக, கந்தசஷ்டி கவசனாக, தமிழ் முருகனாக, பூவரசு மரத்தடியில் இருந்து அருள்புரியும் கருணைக் கடலாம் முருகனின் அற்புதங்களை அடியவர்களுக்கு கட்டுரைகளாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் பணியை திரு. ந. அரியரத்தினம் அவர்கள் நீண்ட காலமாக மேற்கொண்டு வருகின்றார்கள். கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழகங்களில் சிறப்பான பட்டங்களைப் பெற்று அதிபராகவும், கல்விப் பணிப்பாளராகவும், கல்வித்துறைக்கு சிறந்த சேவையாற்றியது போலவே ஆன்மீகத் துறைக்கும் இவர் நீண்டகாலமாக சேவையாற்றிவருவது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

சந்நிதி முருகன் அற்புதங்களின் இரண்டாவது தொகுப்பையும், தற்பொழுது சந்நிதியான் பாகம் நான்கு மலரினையும் கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வெளியீடு செய்வது இங்கே இருக்கின்ற எல்லோருக்கும் மகிழ்ச்சி தருவதாக உள்ளது.

கனடா நாட்டிற்கு வந்து வேலவனின் அற்புதங்களை வெளியீடு செய்வதன் மூலம் இங்கே உள்ள அடியவர்களும் அவனது பெருமையையும், சிறப்பையும், கருணையையும் மேலும் விளங்கிக் கொள்வதற்கு அவர் செய்யும் சேவை மகத்தானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்நிதியும் தரும் ஸ்ரீ செல்வச்சந்நிதியானின் அருளும் ஆசியும் பொதுப்பணியைச் செய்யும் திரு. ந. அரியரத்தினத்திற்கும் அனைத்து அடியார்களுக்கும் கிடைப்பதற்கு சந்நிதியானை வேண்டி வணங்குகின்றேன்.



கொடித்தம்பம் இல்லாத கொடியேற்ற நிகழ்வு வழமைபோல 2013ஆம் ஆண்டு உற்சவத்தில் கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது



கதிர்காமத்தைப் போன்று உற்சவ காலத்தில் வீதியுலா வரும்பொழுது மட்டும் வள்ளி அம்மனுடன் சந்நிதியான் உடனிருக்கும் பரவசக் காட்சி - 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானச்செல்வி சமூகசீலர், வைத்தியகலாநிதி

திருமதி இந்திரா சிவயோகம் FRCS(Eng.)FRC.Ophth
நேத்திர சத்திர சிகிச்சை நிபுணர்

"SHAKTHI VIHAR" 10 DELL ROAD, STONELEIGH, EPSON
SURREY KT17 2ND, UK Tel: (0044) 0208 224 9820

Email: indrasivayoham@doctors.org.uk

பன்னிருகண்மலர் மலர்ந்த கருணைக் கடலாகியவரும், ஞானப்பெருஞ் சுடராகியவருமான செல்வச்சந்நிதி வேல்ப் பெருமான், மெய்யடியாருக்கு ஆற்றிய அற்புத அனுபவங்களை, பாடசாலை அதிபரும், செந்தமிழ் செம்மலுமாகிய திரு. ந. அரியரத்தினம் அவர்கள், எழுத்து மூலம் பதிவு செய்து மூன்று பதிப்புக்கள் இதுவரை வெளியிட்டது போற்றத்தக்கதாகும். சமகால அனுபவங்கள் ஆகையால் பக்தியும் நம்பிக்கையும் ஒருங்கு சேர்ந்த நிலை, இறைவனுடைய கருணா கடாட்ஷத்தை ஈர்க்கும் என்பதை நிரூபிக்கின்றது. தற்காலத் தமிழுலகம் திரைப்படங்கள் காட்டும் காமக் காட்சிகளாலும், கணனி மூலம் தென்படும் துர்ப்பிரயோக எண்ணங்களாலும் திசை திருப்பப்படும் வேளையில் இவ் ஆன்மீகப் படைப்பு மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் ஏதுவாக அமைவது திண்ணம்.

பல நூற்றாண்டுகளுக்கு முன் சைவ சமுதாயம் சீரழிந்து அரசன் உட்பட, சமயப் பற்றற்று வழி தவறுவதைக் கண்டு, அருள்மொழித்தேவரெனும் நாமதாரியாகிய சேக்கிழார் சுவாமிகளின் பெரியபுராணமும், சுந்தரமூர்த்தி நாயனாரின் திருத்தொண்டர் புராணமும் பாடப்பெற்று, அவற்றின் மூலம் பக்திநெறி நின்ற சிவனடியாருக்கு சிவப்பரம்பொருள் திருவிளை யாடல்கள் ஆற்றியதை எடுத்துக்கூறி, அவற்றை செவியுற்ற சைவசமுதாயம், அதன் விளைவாக சீருற்றது. செல்வச்சந்நிதி முருகப்பெருமானே தஞ்சமென பரதவித்துவரும் அடியார்களின் மன நிலையைத் தெரிந்த வெற்றிவேல் பெருமான் காட்டும் பரங்கருணை நிகரற்றது. இவற்றை சகலரும் வாசித்து உணர்ந்து பூரண மன நிறைவு பெற்று வாழ்வதற்கு திரு. அரியரத்தினம் அவர்களின் "சந்நிதியான் அற்புதங்கள்" எனும் நூல் ஊன்று கோலாக உதவுகின்றது என்பதற்கு ஆட்சேபனையே இல்லை என்பது என் கருத்து.

இப்பெரியார் ஆற்றும் தொண்டு மேன் மேலும் வாழ்க.

ஓம் சரவணபவாய நம.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் ஒன்று

மெய்யடியார்கள் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் மீது கொண்டுள்ள பக்தியும் அந்த பக்தியின் காரணமாக சந்நிதியான் மீது அவர்கள் கொண்டுள்ள தொடர்பும் கண்ணப்ப நாயனார் சிவபெருமான் மீது கொண்டிருந்தது போன்ற ஒரு வித்தியாசமான தொடர்பாகக் காணப்படுகிறது. இந்த பக்தி ஒரு வகையில் ஒரு மானிட தொடர்பு போன்று இறுக்கமானதாகவும், நெருக்கமானதாகவும் காணப்படுகின்றது. சிலவேளைகளில் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனது அடியவர்கள் அவனது வாசலில் நின்று சந்நிதியானை உற்ற நண்பன் போல ஏசியும் பேசியும் வழிபடுவார்கள். இன்னும் சிலர் தாய் சேய் போன்று மிகவும் நெருக்கமாக உள்ளம் உருகி கண்ணீர் விட்டு அழுது மன்றாடி உச்சமாக தமது உள்ளக்கிடக்கையை சந்நிதியானிடம் வெளிப்படுத்தி மிகவும் நெருக்கமாக வழிபடுவார்கள். வேறு சிலர் நான் உன்னிடம் தேடிவந்து உன்னை வழிபட்டுள்ளேன். அதேபோல நீயும் எமக்கு உனது திருவருளை வழங்கு என தமது வழிபாட்டை நியாயப்படுத்தி நியாயம் கேட்டு வழிபடுவதையும் நாம் அங்கே காணமுடியும். இவர்களை வன்றொண்டர்கள் என்று அழைக்கலாம்.

இவ்வாறான இந்த பக்திநிலை காரணமாகத்தான் சந்நிதியான் அடியவர்கள் உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் அவர்கள் உள்ளத்தால் சந்நிதியானுக்கு மிக அருகிலேயே இருப்பதாக எண்ணிக் கொள்கின்றனர். அதுமட்டுமன்றி தத்தமது நாடுகளில் இருந்தபடியே திருவிழக்காலங்களில் தாங்களும் தங்கள் தங்கள் வீடுகளில் திருவிழாக்கள் போன்று சுவாமி அறையில் சந்நிதியானுக்கு பூசைகள் செய்தும், கந்தசஷ்டி விரதகாலங்களில் தூ ய்மையாக விரதச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதையும் காணமுடிகிறது. இதே போன்று சந்நிதியானும் அடியார்களது இவ்வாறான வழிபாட்டு முறைகளை எல்லாம் விருப்பத்துடன் ஏற்றுக் கொண்டு அவர்களது குறைகளைப்



289486
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
140380c

போக்கி அவர்களது விருப்பங்களையும் நிறைவேற்றி வருகின்ற அற்புத நிகழ்வுகளும் நடைபெற்று வருவதை காணமுடிகிறது.

1986 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாமணி அழிக்கப்பட்டு, தேர் எரிக்கப்பட்டு ஆலயம் அமைந்திருந்த பகுதி மிக மோசமாக தாக்குதலுக்குள்ளாகி இருந்த காலத்தில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நித்திய பூசைகள் முதன்முறையாக முற்றாக தடைப்பட்டிருந்தது. நித்திய பூசைகள் மற்றும் உற்சவகாலச் செயற்பாடுகள் எல்லாம் எவ்வித குறைகளுமின்றி சிறப்பாக இடம்பெற வேண்டுமென்று செயற்பட்டுவந்த முருகேசு சுவாமிகள் சந்நிதியில் மீண்டும் நித்தியபூசைகள் ஆரம்பிக்கும் வரை தானும் அன்னம் சாப்பிடுவதில்லை என விரதம் பூண்டு அதனை அவ்வாறே செயற்படுத்தியும் வந்தார்கள். இதேபோன்று 1990 ஆம் ஆண்டு தசாப்தத்தின் ஆரம்பகாலப் பகுதியில் ஆலயப்பகுதியில் கடுமையான ஷெல் வீச்சுக்கள், தாக்குதல்கள் இடம் பெற்றதால் அடியார்கள் ஆலயப்பகுதிக்கு செல்ல முடியாதிருந்ததுடன் உற்சவகாலச் செயற்பாடுகளும் தடைப்பட்டிருந்தன. இக்காலத்தில் கைதடியில் சந்நிதியான் அடியார்கள் ஒன்றுகூடி முருகேசு சுவாமிகளின் தலைமையில் உற்சவ காலப் பூசைச் செயற்பாடுகளை பக்தி பூர்வமாக மேற்கொண்டனர்.

இதே காலப்பகுதியில் அதாவது 1991 ஆம் ஆண்டு மத்தியகிழக்கில் உள்ள ஓமான் நாட்டின் தலைநகரான மஸ்கட் என்ற இடத்தில் தொண்டைமானாற்று கிராமத்தைச் சேர்ந்த க. இரவீந்திரன் அவர்கள் சாமி அறையில் வழமைபோல பூசைச் செயற்பட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது முருகப் பெருமானின் படத்தில் ஒரு பிரகாசமான ஒளி தோன்றியது. அந்த ஒளிவீச்சுக்கிடையே சந்நிதி முருகன் வெளிப்பட்டு **“நீ நாளையிலிருந்து 15 நாட்களுக்கு எனக்கு விசேடமாகப் பூசை செய், என் அடியவர்களுக்கும் இதனைத் தெரியப்படுத்து”** என்ற அருள் வாக்கை வழங்கியுள்ளார்கள். ஆம் இவ்வாறான அற்புதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே நடைபெற்றுள்ளது. அதன்படி அடுத்த நாள் அமாவாசை அற்றுப்போக பூசை ஆரம்பித்து பின் அங்கே அடியார்கள் புடைசூழ திருவிழாப்போல 15 நாட்களும் மிகச்சிறப்பாக திருவிழாப் பூசைகள் நடாத்தப்பட்டதாக தனது அற்புத அனுபவத்தை மாமனிச் சிறப்பு மலரில் அந்த அடியவர் கட்டுரை மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

இதே போன்று இதே காலப்பகுதியில் சந்நிதியானுக்கு சிறப்பாக பாமாலை பாடிய சிவ ஆறுமுகம் அவரது மனைவி சரோஜினிதேவி குடும்பத்தினர் ஆபிரிக்கா கண்டத்திலிலுள்ள சாம்பியா நாட்டில் சந்நிதியானுக்கு உற்சவ காலத்தில் சிறப்பாக உற்சவ காலப் பூசைகளை நடாத்தியுள்ளனர். 1992ஆம் ஆண்டு முருகேசு சுவாமிகளே சாம்பியாவுக்கு சென்று சந்நிதியானது உற்சவ காலப் பூசைகளை ஆலயத்தில் இடம்பெறுவது போன்று மிகச்சிறப்பாக நடாத்தியிருந்தார்கள். சாம்பியா நாட்டில் மிகவும் பயபக்தியாக இடம்பெற்ற இந்த உற்சவ காலப் பூசையில் வேறு நாடுகளையும் சேர்ந்த 60க்கு மேற்பட்ட குடும்பங்கள் ஒன்றுகூடி எல்லோரும் சந்நிதியான் அடியவர்கள் என்ற உணர்வுடன் அந்த உற்சவ காலச் செயற்பாடுகளை செயற்படுத்தியுள்ளனர்.

ஆம் இவ்வாறெல்லாம் சந்நிதியான் மீது அவனது மெய்யடியார்கள் கொண்ட மிகவும் ஆழமான அந்த பக்தி உணர்வினால் சந்நிதியான் ஆலயத்திற்கு நேரடியாகச் செல்லமுடியாத நிலையில், அல்லது சந்நிதியான் ஆலயத்தில் உற்சவ காலத்தில் நெருக்கடிகள் ஏற்பட்ட காலகட்டங்களில் சந்நிதியானின் மெய்யடியார்கள் தங்கள் தங்கள் இருப்பிடங்களில் இருந்தவாறே தாயகத்திற்குள்ளேயும் தாயகத்திற்கு வெளியேயும் பல்வேறு இடங்களில் ஏராளம் அடியவர்கள் இவ்வாறான இந்த உற்சவகாலம் மற்றும் கந்தசஷ்டி காலப் பூசைச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். இப்பொழுதும் ஈடுபட்டு வருகின்றனர். இவற்றை வெளிப்படுத்தும் சில தகவல்களையே இங்கே அடியவர்களுக்கு அறியத்தந்துள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போன்றுதான் கனடாவில் சந்நிதியானுக்கு பூசைச் செயற்பாடுகள் இடம்பெற்றாலும், கனடாவில் இந்த உற்சவகாலப் பூசைச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட விதமும் அந்த செயற்பாடுகள் படிப்படியாக வளர்ச்சி பெற்று இன்று கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற வரலாறும் ஒரு அற்புத நிகழ்வாகும். ஆம் கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமும் சந்நிதியானின் திருவுள்ளப்படி அவனது திருவிளையாடலால் உருவாக்கப்பட்ட ஆலயமாகும். அந்த அற்புத நிகழ்வை இங்கே அடியவர்களுக்கு வழங்குகின்றோம்.

இன்று கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பிரதம பூசகராக செயற்பட்டுக் கொண்டிருக்கும் பொன்னுத்தரை ஐயர் புவனேந்திரன் ஐயர் மருதர் கதிர்காமர் வழிவந்த ஒரு பூசகர். இதனால் அவர் தனது இளமைக்காலத்தில் இயல்பாகவே ஆலயச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தாலும் கல்வி கற்று தாயகத்தில் ஒரு அரச ஊழியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் போரச் சூழல் காரணமாக நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து 1986ஆம் ஆண்டு கனடாவுக்கு வந்து இங்கே தொழில் புரிந்து கொண்டிருந்தார்கள்.

1996ஆம் ஆண்டு இவரது சகோதரி குடும்பம் சாம்பியா நாட்டிலிருந்து கனடாவுக்கு வந்து சேர்ந்தனர். அது சந்நிதியானின் வருடாந்த திருவிழாவை எதிர்நோக்கியிருந்த காலகட்டம். இவரது மைத்துனர் சிவ ஆறுமுகமும், சகோதரி சரோஜினிதேவியும் ஏற்கனவே சாம்பியாவில் அடியார்கள் புடைசூழ சந்நிதியானின் வருடாந்த உற்சவ காலச் செயற்பாடுகளைச் சிறப்பாக நடாத்தியிருந்தார்கள். இப்பொழுது கனடாவுக்கு வந்த நிலையில் இங்கேயும் சாம்பியாவில் மேற்கொண்டதைப் போன்று சந்நிதியானின் வருடாந்த உற்சவகாலப் பூசைகளை நடாத்தி சந்நிதியானின் உற்சவகாலத் திருக்கோலத்தை கண்குளிரக் காணவேண்டுமென்று பெருவிருப்பம் கொண்டிருந்தனர். அத்துடன் சந்நிதியானுக்கு உற்சவகாலப் பூசைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்படி நடாத்துவதற்கு மருதர் கதிர்காமர் மரபு வழிவந்த புவனேந்திரன் ஐயரும் இங்கே வாழ்ந்து கொண்டிருப்பதையும் அவர்கள் மனதிற்குள் ஆழமாக உள்வாங்கிக் கொண்டனர்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில்தான் சிவ ஆறுமுகம் சறோஜினி குடும்பத்தினர் சந்நிதியானின் வருடாந்த உற்சவகாலப் பூசைச் செயற்பாடுகளை கனடாவில் நடாத்த விரும்பும் தங்கள் உணர்வினை புவனேந்திரன் ஐயரிடம் வெளிப்படுத்தினர். அத்துடன் இது தொடர்பான முழு ஆயத்தங்களையும் தாம் செய்வதாகவும் பூசைச் செயற்பாட்டை புவனேந்திரன் ஐயரே நடாத்தித் தரவேண்டுமென்றும் விநயமாகக் கேட்டுக்கொண்டனர். ஆனால் புவனேந்திரன் ஐயர் அவர்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டார்கள். ஆனாலும் இதற்கு இவரது மைத்துனர் ஆறுமுகமும் இவரது சகோதரியும் இலகுவில் மசிந்து கொடுக்கவில்லை. மருதர் கதிர்காமர் வழிவந்த காரணத்தால் பூசைச் செயற்பாடுகளை நடாத்தவேண்டிய கடமையும், பொறுப்பும் புவனேந்திர ஐயருக்கு இருக்கின்ற நியாயங்களை அவருக்கு எடுத்து கூறினார்கள். அந்த நிலையிலும் புவனேந்திரன் ஐயர் அதற்கு உடன்படவில்லை.

இப்பொழுது தாம் புவனேந்திர ஐயருடைய சகோதரி குடும்பம் என்றவகையில் தமக்காக அதனைச் செய்யத்தான் வேண்டுமென தமக்கு உள்ள உரிமையுடன் கேட்டுக் கொண்டார்கள். இந்த நிலையில் புவனேந்திரம் ஐயர் அதனை நேரடியாக மறுக்கமுடியாத சூழ்நிலை அவருக்கு ஏற்பட்டது. ஆனாலும் எனக்கு லீவு எடுக்க முடியாது அப்படி எடுத்தால் எனக்கு யார் சம்பளம் தருவார்கள் என்பது போன்ற நியாயங்களை அவர்களுக்கு பதிலாகத் தெரிவித்து சந்நிதியானுக்கு பூசை செய்கின்ற அந்த செயற்பாட்டிற்கு மீண்டும் மறுப்புத் தெரிவித்து விட்டார்கள்.

தாம் சாம்பியாவில் ஆரம்பித்த சந்நிதியானின் உற்சவகால பூசைச் யெற்பாடுகளை இடைநிறுத்தாது குறிப்பிட்ட வருடங்கள் தொடர்ந்து அதனைச் செயற்படுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய தார்மீக இறைகடமை தமக்கு இருப்பதை அவர்கள் நன்றாகவே உணர்ந்திருந்தனர். அதே வேளை சந்நிதி வேலவனின் திருவிழாக் கோலத்தை தொடர்ந்து கண்குளிரக் கண்டு களிக்க வேண்டுமென்ற உணர்வுடனும், ஆர்வத்துடனும் செயற்பட்டுக்கொண்டிருந்த இவரது சகோதரி குடும்பத்தினருக்கு உண்மையில் இது பெரிய ஏமாற்றத்தையும் தாங்கமுடியாத கவலையையும் ஏற்படுத்தியது. ஆனாலும் தாம் தமது மனித சக்திக்குட்பட்ட வகையில் எல்லாவித முயற்சிகளையும் எடுத்து விட்டதையும் உணர்ந்து கொண்டனர்.

இந்த நிலையில் சொந்தமோ, பந்தமோ மனிதர்களை நம்பி தமக்கு எந்த பயனும் இல்லை மனிதர்களால் எதுவும் நடக்கப்போவதுமில்லை என்பதையும் அவர்கள் தமக்குள் சிந்திக்கத் தொடங்கினர். இறுதியில் சந்நிதியானது திருப்பாதங்களிலே தமது வேண்டுதல்களை சமர்ப்பித்தனர். **எமது விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு நீதானப்பா வழி செய்ய வேண்டுமெனவும்** வேண்டுதல் செய்தனர். இச்சந்தர்ப்பதில் ஏதோ உள்ளுணர்வு தூண்டியதால் எது நடந்தாலும் பறவாயில்லை என மீண்டும் ஒருமுறை புவனேந்திரன் ஐயரிடம் சென்றனர். சந்நிதியானின் கருணையையும், அவன் அடியார்கள் வாழ்க்கையில் தினம் தினம் நிகழ்த்திக்கொண்டிருக்கின்ற அற்புத நிகழ்வுகளையும் அவருக்கு எடுத்துக் கூறினார்கள். இவ்வாறு எடுத்துக்கூறி எதற்கும் நீ யோசிக்காமல் வந்து உற்சவகாலப் பூசைகளை நடாத்தித்தா. ஏனையவை எல்லாம் நல்லாகவே நடக்கும் எனவும் கேட்டுக் கொண்டார்கள்.

ஆனால் நாம் சிற்றறிவு படைத்த மனிதர்கள் அல்லவா புவனேந்திர ஐயரும் தனது சிற்றறிவுக்குள்ளேயே நின்று சிந்தித்தார்கள். சந்நிதியானின் தனிச்சிறப்பிற்கு காரணமாக இருந்த அந்த காண்டாமணி, ஆயிரக்கணக்கான சந்நிதியான் அடியவர்களின் உழைப்பால் உருவமைக்கப்பட்ட 45 அடி உயரமான கலைப்பொக்கிஷமான அந்த சித்திரத்தேர் என்பவை 1986ஆம் ஆண்டு சிங்கள இராணுவத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2013 உற்சவத்தில் வழமைபோல சிறுமிகள் சந்நிதியானுக்கு விளக்கெடுக்கும் அழகுத் தோற்றம்



06-08-2013இல் நடைபெற்ற கொடியேற்ற உற்சவ பூசை சடங்குகளின் நிறைவாக ஆலய மரபிற்கிணங்க பிரதமகுரு பொன் புவனேந்திரன் ஐயர் முழந்தாளிட்டு சந்நிதியானை வணங்கும் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்றே அழிக்கப்பட்டமை, ஆலயச்சூழலில் உள்ள மடங்கள், மக்களின் குடியிருப்புக்கள் மற்றும் கட்டிடங்கள் அழிக்கப்பட்டதுடன் ஆலயமும் சேதமாக்கப்பட்டது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக சந்நிதியானின் நித்திய பூசைகள் கூட முதன்முறைாக முற்றாகத் தடைப்பட்டு ஆலயச் சூழலே அழிவின் சாட்சியாக இருந்தது.

சந்நிதியானைக் கண்கண்ட தெய்வமாக நம்பியிருந்த புவனேந்திரன் ஐயரின் மனதில் இவை அனைத்தும் ஆறாத வடுக்களாக அடிமனதில் ஆழமாகப் பதிந்துவிட்டதால் சந்நிதி முருகன் இருக்கின்றானா? என்ற ஒரு கேள்வி அவர் உள்ளத்தில் ஏற்பட்டு விட்டது. மேலும் சந்நிதியான் உண்மையான தெய்வமாக இருந்தால் சந்நிதியான் அற்புதங்களை நடாத்துபவனாக இருந்தால், காக்கும் தெய்வமாக இருந்தால் இவ் அழிவுகளையும் மக்களின் இந்தத் துன்பங்களையும் தடுத்தல்லவா இருக்க வேண்டும் என்ற முடிவிற்கு அப்பொழுதே வந்திருந்தார்கள். அது மட்டுமல்ல ஒரு நாஸ்திகன் போல அந்த எதிர்மறையான உணர்வுடனேயே அவர் இவ்வளவு கலாமும் வாழ்ந்து கொண்டும் இருந்துள்ளார்கள். இந்த நிலையில இவருடைய சகோதரி குடும்பத்தினர் கூறிய அந்த கருணைத் தெய்வமான பரம்பொருள் பற்றிய அற்புதக் கருத்துக்கள் கூட நாஸ்திகம் பேசிக்கொண்டிருந்த புவனேந்திரன் ஐயருடைய முடிவில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

உலகத்தில் எந்த மூலையில் அவர்கள் வாழ்ந்தாலும் அந்த மெய்யடியார்கள் விருப்பங்களை பூர்த்தி செய்கின்ற கருணைத் தெய்வம் அல்லவா சந்நிதி முருகன். ஆம்! திரு. திருமதி சிவ ஆறுமுகம் சறோஜினிதேவி குடும்பத்தினர் சாம்பியா நாட்டில் ஆரம்பித்த வருடாந்த உற்சவகாலப் பூசைச் செயற்பாடுகள் தடைப்படக் கூடாதென்ற அவர்கள் உணர்வினையும் அவர்கள் தனது பூசைச் செயற்பாடுகளைக் கண்குளிரக் காணவேண்டுமென்று விரும்பிய அந்த மெய்யடியார்களின் விருப்பங்களையும் பூர்த்தி செய்ய சந்நிதியான் திருவுள்ளம் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோலத் தனக்கு தொண்டு செய்ய வேண்டிய பூசகர் மரபுவழிவந்து தற்பொழுது நாஸ்திகம் பேசிக்கொண்டு திரிகின்ற புவனேந்திரன் ஐயரின் அறியாமையைப் போக்கி அவருக்கு கருணை புரிகின்ற அந்தத் திருவிளையாடலை நடாத்துவதற்கும் இப்பொழுது திருவுள்ளம் கொண்டான்.

1996ஆம் ஆண்டு வருடாந்த உற்சவத்திற்கு இன்னும் இரண்டு நாட்கள் இருந்தன. புவனேந்திரன் ஐயர் கனடா தமிழ்ஈழச் சங்கத்திற்கு சென்றுவிட்டு தனது காரில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சற்றும் எதிர்பாராத விதமாக அவருடைய கார் பெரிய விபத்துக்குள்ளாகியது. காருக்கு பெரியளவில் சேதம் ஏற்பட்ட பொழுதிலும் அதிஷ்டவசமாக புவனேந்திரன் ஐயருக்கு வெளியில் எந்தவித காயங்களும் ஏற்படாது காப்பாற்றப்பட்டார்கள். அதே நேரம் உடம்பிற்குள் நோவுகள் ஏற்பட்டதனால் பின்பு ஆஸ்பத்திரிக்குச் சென்று பரிசோதித்தார்கள். ஆனாலும் ஆபத்தை ஏற்படுத்தும் விடயங்கள் எதுவும் உடம்பிற்குள் இல்லை என அங்கே வைத்தியர்கள் வெளிப்படுத்தியதால் இவரும் இவருடைய குடும்பமும் மிகப்பெரிய ஆறதலடைந்தனர். அத்துடன் புவனேந்திரன் ஐயர் தனக்கு நடந்த விபத்தினை வேலைத்தளத்திற்கு அறிவித்து வைத்தியரின் மருத்துவச்சான்றிதளையும் அவர்களுக்கு முறைப்படி அனுப்பி வைத்தார்கள். வேலை வழங்கும் நிறுவனம் புவனேந்திரன் ஐயரின் உடல்நிலையைக் கருத்திற் கொண்டு அவருக்கு இரண்டு வாரங்களுக்கு சம்பளத்துடன் கூடிய மருத்துவ விடுமுறையை வழங்கியது.

இவருடைய வீட்டிற்கு இவரை வருத்தம் பார்ப்பதற்காக வருகை தந்த இவரது சகோதரியும் மைத்துனரும் முருகனின் திருவிளையாடல்களைப் பார்த்தாயா? நீ எம்மிடம் கேட்டது போன்று சந்நிதியானது உற்சவகாலப் பூசைகளை நீ நடாத்தும் காலத்தில் சந்நிதியான் உனக்கு சம்பளமும் தந்து விடுமுறையும் தந்துள்ள அற்புதத்தை பார்த்தாயா என எடுத்துக் காட்டினர். ஆகவே இனிமேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசையை நடாத்த மறுக்காதே என்று புவனேந்திரன் ஐயருக்கு எடுத்துக் கூறினார்கள். இப்பொழுது நடந்து முடிந்த நிகழ்வுகளை ஒவ்வொன்றாக மீட்டுப் பார்த்த புவனேந்தின் ஐயர் சந்நிதியானின் கருணையையும் அவனது திருவிளையாடலையும் நன்கு உணர்ந்து கொண்டார்கள். ஆனாலும் உற்சவகாலப்பூசையை நடாத்துவதற்கு அவரது உள்ளத்தில் ஏதோ சலனம் ஏற்பட்டுக் கொண்டேயிருந்தது. இவ்வாறு சலனப்பட்ட மனத்துடன் நித்திரைக்குச் சென்றார்கள்.

புவனேந்திரன் ஐயரை ஒருவர் துரத்திக்கொண்டு செல்கிறார். அவரிடமிருந்து தப்புவதற்கு புவனேந்திரம் ஐயர் சின்னக்கடற்கரை மணலில் கால் புதையப் புதைய வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறார். ஆனாலும் அவர் இடையில் கால் தடுக்கி விழுந்து விட்டார். அப்பொழுது துரத்திச்சென்ற அந்த பயங்கர உருவமுள்ள அந்த மனிதன் விழுந்து கிடந்த புவனேந்திரன் ஐயரின் கால் ஒன்றைப் பிடித்து அவரை தலைகீழாக கொர கொர என ஆலயத்தின் மேற்குப் புறத்து ஆற்றங்கரையேோரமாக இழுத்துச் சென்றான். அங்கே வள்ளி அம்மன் வெளிமண்டபத்தினூ டாக ஆலயத்திற்குள் பிரவேசித்து தலவிருட்சமான பூவரசு மரத்தடிக்கு புவனேந்திரன் ஐயரை கொண்டு வந்து அப்படியே அங்கே போட்டு விட்டான். அதுமட்டுமல்ல அங்கே பயத்துடன் நிலத்தில் கிடந்த புவனேந்திரன் ஐயரை அந்த பயங்கர உருவமுள்ள மனிதன் கடுமையான முகத்துடன் முறைத்துப் பார்த்து “உம்” என்று உறுக்கி விட்டு அங்கி ருந்து சென்று விட்டான்.

ஆம்! பூசை வைப்பதா இல்லையா என்ற சலனப்பட்ட மனதுடன் நித்திரைக்குச் சென்ற புவனேந்திரன் ஐயர் இவ்வாறான அந்த கனவைக் கண்டதனால் துடிதுடித்து நித்திரையிலிருந்து விழித்தெழுந்தார்கள். அவரை அறியாமலே அவரது உதடுகள் கந்தா, கடம்பா, காத்திகேயா, கல்லோடைக் கந்தா என முருக நாமங்களை உச்சரித்தன. விடிந்தபின் தனது தாயாருக்கு தான் கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவை தயக்கத்துடன் எடுத்துக் கூறினார்கள். தாயார் புவனேந்திரன் ஐயரின் தந்தையார் பொன்னுத்துரை ஐயருக்கும் சந்நிதியான் இதேபோன்ற அற்புதங்களை நிகழ்த்திய வரலாறுகளைக் எடுத்துக் கூறினார்கள். ஆம்! இந்தக் கனவும் நீ உற்சவகாலப் பூசைகளை நடாத்துவதற்கு சந்நிதிமுருகன் திருவருள் கொண்டுள்ளதன் வெளிப்பாடு என்பதை சுட்டிக்காட்டி அவரது வரலாற்றுக் கடமையை சற்று இறுக்கமாகவும் விளக்கமாகவும் புவனேந்திரன் ஐயருக்கு புரிய வைத்தார்கள். அனுபவத்தால் முதிர்ந்த தாயாரின் இத்தகைய ஆலோசனைகளால் புவனேந்திரன் ஐயர் இப்பொழுது முழுமையான தெளிவு நிலைக்கு வந்ததுடன் முருகனுக்கு தொண்டு செய்ய வேண்டிய தனது வரலாற்றுக் கடமையை முழுமையான விருப்பத்துடன் செயற்படுத்த ஆரம்பித்தார்கள்.

ஆம் இவ்வாறுதான் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனின் உற்சவகாலப் பூசைகள் கனடாவில் புவனேந்திரம் ஐயர் அவர்களால் முதன் முதலாக 1996ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இரண்டு வருடங்கள் இவரது மைத்துனர் சிவ ஆறுமுகம் அவர்கள் வீட்டில் பூசைகள் நடாத்தப்பட்டன. பின்பு மிசிசாகவில் உள்ள யாழ். கூட்டுறவு மண்டபத்தில் உற்சவகாலப் பூசைகள், கந்தசஷ்டி விரதகாலப் பூசைகள் எல்லாம் 1998ஆம் ஆண்டு தொடக்கம் 2004ஆம் ஆண்டுவரை மிகச்சிறப்பாக நடாத்தப்பட்டன. இங்கே வருடாவருடம் அடியார்களின் எண்ணிக்கை அதிகரித்ததுடன் அடியார்கள் பாற்செம்பு, காவடி போன்ற நேர்த்தி செயற்பாடுகளிலும் ஏராளமாக ஈடுபடத் தொடங்கினர். கூட்டுறவுக் கட்டடத்தில் ஏனைய இனத்தவர்களும் குடியிருந்ததால் இவ்வாறான செயற்பாடுகளை அவர்கள் முழுமையாக ஏற்றுக்கொள்வதிலும் பிரச்சனைகள் இருந்தன. இதனால் அடியார்கள் நேர்த்திகளை திருப்தியாக செயற்படுத்துவதற்கு தனியான ஒரு இடத்தில் ஆலயம் அமைந்திருக்க வேண்டியதன் அவசியத்தை பலரும் அப்பொழுது உணரத் தொடங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய சூழ்நிலைகள் எல்லாவற்றையும் கருத்திற் கொண்டுதான் சந்நிதியானுக்கு நித்திய பூசைகள் உள்ளடங்கியதாக தாயகத்தைப்போன்ற ஒரு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் 2004ஆம் ஆண்டு கார்த்திகை விளக்கீடு அன்று கனடாவில் இல. 1, கோல்டன் கேற் ஸ்காபரோ என்ற தற்பொழுது செயற்பட்டு வரும் அமைவிடத்தில் உருவாக்கப்பட்டது. இந்த ஆலயம் ஆரம்பிக்கப்பட்ட பொழுதும், அதற்கு முன்பு உற்சவகாலப் பூசை செயற்பாடுகள் வேறு இடங்களில் இடம்பெற்ற பொழுதும் பல மெய்யடியார்கள் இவற்றிற்கெல்லாம் உற்ற துணையாக இருந்ததுடன் வேண்டிய சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கி வந்ததும் குறிப்பிடத்தக்கது. முக்கியமாக வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இரத்தினசிங்கம் ஐயா, அனிதா, உடுப்பிட்டி சற்குணம், தொண்டைமானாற்றில் டாக்டர் மகேந்திரா, விக்கி, செட்டியஊரைச் சேர்ந்த முருகேசுவும் அவரது வாரிசுகளும், நித்தியானந்தம் குடும்பம், கெருடாவிலில் பாலேந்திரா, கந்தசாமி, கனகசிங்கம் சாஸ்திரியார், ஆனந்தலிங்கம் குடும்பம், காந்தி, வல்வெட்டித்துறையில் சிவப்பிரகாசம், யோகராசா, கதிரிப்பாய் ஏ. கே இராமலிங்கம், புங்குடுதீவு பாலா இவர்களைப்போன்று இன்னும் பல அடியவர்களின் பங்களிப்புகளை நன்றியுடன் நினைவு கூறுவதாக புவனேந்திரன் ஐயா அவர்கள் அடியேனிடம் எடுத்துக் கூறினார்கள்.

மேலும் தற்பொழுது பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் ஆலயத்திலுள்ள அழகான தேரை ஜெயராசா அவர்கள் ஒரு மாத கால இடைவெளியில் அமைத்து வழங்கியதையும், ஆலய உள் கட்டமைப்புச் செயற்பாடுகளில் செட்டியஊர் குட்டி, இடைக்காடு பகீர், உடுப்பிட்டி குமார் போன்ற அடியார்கள் வழங்கிய ஒத்தழைப்புகளும் முக்கியமானவை. அதே நேரம் இன்று தாயகத்தைப் போன்று எல்லாக் கிராமங்களையும் சேர்ந்த அடியார்கள் தாமாக நாடிவந்து இவ்வாலயத்தில் எல்லாவிதமான தொண்டுகளையும் மேற்கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றனர். உற்சவகாலம் உட்பட இங்கே இடம்பெறும் அன்னதானச் செயற்பாடுகள் போன்ற அனைத்துச் செயற்பாடுகளும் முழுமையாக தொண்டர்களாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் கதிர்காமக் கந்தன் ஆலயத்தைப் போல அங்கே கடைப்பிடிக்கப்படும் சடங்குகள் சம்பிரதாயங்களைப் பின்பற்றி செயற்பட்டு வரும் ஆகம விதிக்கு அப்பாற்பட்ட ஒரு ஆலயமாகும். கதிர்காமத்தில் கப்புறாளைகள் என்ற மரபினர் வாய்கட்டி பூசை செய்வது போல இங்கே சந்நிதியில் மருதர் கதிர்காமர் பரம்பரையினர் வாய் கட்டி மௌன வழிப்பூசையை மேற்கொண்டு வருகின்றனர். கனடாவில் இன்னொரு ஆலய நிர்வாகத்தினர் செல்வச்சந்நிதி ஆலயத்தை தமது ஆலயத்தில் ஓர் அங்கமாக இணைத்து செயற்படுத்த விரும்பினாலும் அது கைகூடவில்லை. தற்பொழுது மருதர் கதிர்காமர் மரபில் வந்தவர்களாலேயே சந்நிதி ஆலயம் அமைக்கப்பட்டு அதற்கான தனித்துவத்துடன் அதே மரபில் வந்தவர்களே பூசைகளை நடாத்துகின்ற ஆலயமாக செயற்பட்டு வருவதும் சந்நிதியான் திருவிளையாடலே.

"எல்லாம் அவனருளாலே"

ஓம் முருகா



2013 உற்சவத்தில் பூசகர்களும் சில தொண்டர்களும் எழுந்தருளி முருகனுடன் தோன்றும் காட்சி



289486

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் இரண்டு

கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்ற இறை வார்த்தை ஒரு சாதாரண வார்த்தை அல்ல. ஆன்மீக நம்பிக்கை உள்ளவர்களுக்கு அது ஒரு நிதர்சனமான வார்த்தையாகவே அமைந்துள்ளது. அதுவும் உண்மையான சந்நிதியானது அடியவர்களது நிஜவாழ்வில் அது இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் சென்ற வருடம்(2012) நடைபெற்ற இவ்வாறான ஒரு நிகழ்வை இங்கே அடியார்களுக்கு வழங்குகின்றோம்.

ஆனந்தராஜா தவரூபன் சொந்த இடம் நல்லூர். கதிரமலை சுமங்கலி சொந்த இடம் குப்பிளான். இவர்கள் இருவருக்கும் தாயகத்தில் திருமணம் நடைபெற்றது. திருமணம் முடிந்து கனடாவுக்கு வந்து ஐந்து வருடங்கள் ஆகின்றன. அமைதியான இந்நாட்டுச் சூழலில் மகிழ்ச்சியாகவே அவர்களது குடும்ப வாழ்க்கை சென்று கொண்டிருக்கிறது. ஆனாலும் பிள்ளைச்செல்வம் கிடைக்காததால் எல்லோரையும் போலவே அவர்களுக்கும் அது ஒரு மனவேதனையைக் கொடுத்துக் கொண்டிருந்தது. இவ்வாறான ஒரு வேதனை மனதில் இருந்தாலும் ஆரம்பத்தில் அது அவர்களுக்கு பெரிதாகத் தெரியவில்லை. ஆனாலும் வருடங்கள் உருண்டோடி நான்கு, ஐந்து வருடங்கள் கடந்து விட்டன. இந்த நிலையில் நாளும் பொழுதும் திரு. திருமதி தவரூபன், சுமங்கலி ஆகிய இருவரும் தமக்கு பிள்ளை இல்லை என்பது மட்டுமல்ல பிள்ளையே கிடைக்காது போய்விடுமோ என்று ஆழமாச் சிந்திக்கத் தொடங்கினர். இவ்வாறெல்லாம் இவர்கள் சிந்திக்கத் தொடங்கிய பொழுதுதான் பிள்ளை இல்லாத அந்தக்குறை இவர்களுக்கு மிகப்பெரிய கவலையை ஏற்படுத்தும் விடயமாக வெளிப்பட ஆரம்பித்தது. இறுதியில் இருவரும் இந்தியாவுக்குச் சென்றேனும் வைத்தியம் செய்து மகப்பேற்றை எப்படியும் பெற்றுவிட வேண்டுமென்று ஆழமாகச் சிந்திக்கத் தொடங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமங்கலிக்கு தலைமுடிவளித்தல், அன்னச்சோறு ஊட்டுதல் ஆகிய சிறுவயதுச் சடங்குகள் எல்லாம் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் தான் இடம்பெற்றன. இதேபோன்று சுமங்கலி சிறுபிள்ளையாக இருக்கும் பொழுதே அவருடைய பெற்றோர் அவரை சந்நிதி ஆலயத்திற்கு அழைத்துச் சென்று சந்நிதியானுடைய அடியவளாக அவரை வளர்த்திருந்தார்கள். அதுமட்டுமல்ல சுமங்கலி பெரிய பிள்ளையாக வளர்ந்தபின்பு அடிக்கடி சந்நிதியானிடம் சென்று வழிபட்டு அங்கே கிடைக்கின்ற அந்த வித்தியாசமான பக்தி உணர்வையும், ஆன்மீக மனநிறைவையும் அனுபவத்தால் நன்கு உணர்ந்து கொண்ட ஒரு அடியவராகினார்.

இவ்வளவு தொடர்புகள் சந்நிதியானுடன் திருமதி சுமங்கலிக்கு இருந்த பொழுதிலும் கனடாவுக்கு வருகைதந்து ஏறத்தாள நான்கு, ஐந்து வருடங்கள் சென்றுவிட்ட நிலையிலும் அவர் கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு ஒருநாளேதும் சென்று சந்நிதியானை வழிபட சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆம் இப்பொழுது பிள்ளை இல்லாத குறை ஏற்பட்டு பிள்ளை இல்லாமலே தமது வாழ்வு முடிந்துவிடுமோ என்று சிந்திக்கத் தொடங்கிய பொழுதுதான் சந்நிதியனுடைய அருளின் சிறப்பும் அவனது மகிமையும், கருணையும் அவரது அடிமனதிலிருந்து வெளிவரத் தொடங்கியது. அதுமட்டும்ல கனடாவிலேயே சந்நிதியான் கோயில் கொண்டிருக்கும் பொழுது இவ்வளவு நாட்களும் அவனிடம் சென்று வழிபடவில்லையே என்ற மனவேதனையும் அவரை வாட்டத் தொடங்கியது.

இறுதியில் ஒரு வெள்ளிக்கிழமை சுமங்கலி தனது கணவருடன் கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு சென்று வழிபட்டார்கள். ஆனாலும் கனடாவிலுள்ள இயந்திரமயமான வாழ்க்கைச் சூழல் காரணமாக அவர் தொடர்ந்தும் சந்நிதியானிடம் சென்று வழிபட முடியாத சூழ்நிலை மீண்டும் ஏற்பட்டது. சந்நிதியானிடம் தொடர்ந்து சென்று வழிபட முடியவில்லையே என்று சிந்திக்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதெல்லாம் ஒரு தவிப்பும் வேதனயும் சுமங்கலிக்கு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. சுமங்கலியின் உள்ளத்தை அது பெரிதும் வாட்டத் தொடங்கியது.

இறுதியில் சந்நிதியானிடம் தொடர்ந்து சென்று அவனை வழிபட வேண்டுமென்ற முடிவை தமக்குள் உறுதியாக ஏற்படுத்திக் கொண்டார்கள். அதுமட்டுமல்ல வேண்டுவோர்க்கு வேண்டியவற்றை எல்லாம் அள்ளி வழங்குகின்ற அற்புதக்கந்தனாகிய நீதான் எனக்கு பிள்ளைச் செல்வத்தையும் தரவேண்டும் என்ற வேண்டுதலையும் சந்நிதியானது திருப்பாதங்களில் சமர்ப்பணமாக்கினார்கள். இவ்வாறான உறுதிப்பாடுகளுடன் 2012 ஆம் ஆண்டு தைப்பூசத்தன்று கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தை வந்தடைந்தார்கள்.

அந்த தைப்பூசத்திருநாளில் சுமங்கலி சந்நிதி யானுக்கு பாற்செம்பு எடுத்தார்கள். அத்துடன் ஒவ்வொரு சனிக்கிழமையும் தவறாது சந்நிதியானிடம் வந்து வழிபாடு செய்வதற்கும் உறுதி எடுத்துக்கொண்டார்கள். அதுமட்டுமல்ல ஒவ்வொரு சனிக்கிழமையும் சந்தியில் இடம்பெறும் அந்த திருமுழுக்குப் பூஜையின் பொழுது நவக்கிரகங்களுக்கு ஜல அபிஷேகம் செய்வதற்கும் நேர்த்தி வைத்தார்கள். இந்த நேர்த்தியின் ஓர் அங்கமாக, அடையாளமாக முதற் சனிக்கிழமை பிரதம பூசகர் மூலம் குத்தி நாணயத்தை மஞ்சள் துணியில் கட்டி அதனை மூலஸ்தானத்தில் ஒரு குறிப்பிட்ட காலம் வைத்துப் பேணுகின்ற அந்த சடங்கு முறையினையும் நிறைவு செய்தார்கள்.

ஆம் அவர் நேர்த்தி வைத்தது போல ஒவ்வொரு சனிக்கிழமையும் தவறாது ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்குச் சென்று அங்கே இடம்பெற்றுவரும் திருமுழுக்குப்பூசையில் பங்குபற்றி அந்த அமைதியான சூழலில் சந்நிதியானை மனமுருகி வழிபாடு செய்து வந்தார்கள். அதேபோன்று அந்த திருமுழுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசையின் பொழுது தட்சணாமூர்த்தி உள்ளடங்கலாக நவக்கிரகங்களுக்கு அடியவர்களால் மேற்கொள்ளப்படும் அந்த ஜல அபிஷேகச் செயற்பாட்டினையும் தவறாது மேற்கொண்டு வந்தார்கள். ஆம்! வருடங்கள் பல செல்லவில்லை, மாதங்கள் கூட பல செல்லவில்லை. ஓரிரு மாதங்கள் மட்டுமே அவ்வாறு சென்றிருந்தது.

திருமதி சுமங்கலி அவர்கள் சந்நிதியான் மீது கொண்டிருந்த அந்த ஆழமான பக்திக்கும் அவர் ஆலயத்தில் தவறாது நிறைவேற்றிவந்த அந்த நேர்த்திக்கும் சந்நிதியான் தனது கடைக்கண்பார்வையைக் காண்பித்துவிட்டான். ஆம் திருமதி சுமங்கலி அவர்கள் ஓரிரு மாதங்களிலேயே தான் தாய்மை அடைவதற்குரிய அறிகுறியை உணர்ந்து கொண்டார்கள். திரு. திருமதி தவரூபன் சுமங்கலி இருவரது உள்ளத்திலும் மகிழ்ச்சி கரைபுரண்டோடியது. இருவரும் தொடர்ந்து தமது நேர்த்தியை நிறைவேற்றி சந்நிதியானை உள்ளம் உருகி வழிபாடு செய்து வந்தார்கள்.

என்ன ஆச்சரியம் 2012 ஆம் ஆண்டு தைப்பூசத்தினத்தன்று சந்நிதியானது சந்நிதானத்தில் பாற்செம்பு எடுத்து நேர்த்திவைத்து செயற்பட ஆரம்பித்த சுமங்கலி அவர்களுக்கு அடுத்த வருடமே குழங்தைப்பேறு கிடைக்கின்ற அற்புதம் அங்கே நடந்தேறியது. ஆம் 2013 ஆம் ஆண்டு தைமாதம் 30 ஆம் திகதி அவர்கள் சந்தியானிடம் விரும்பி வேண்டியபடியே அழகிய பெண்குழந்தையைப் பெற்றெடுக்கும் பேற்றினைப் பெற்றுவிட்டார்கள்.


ஆம், அவர்களுடைய மகிழ்ச்சியின் அளவை எம்மால் அளவிட்டுத்தான் கூறமுடியுமா? அந்த மகிழ்ச்சியுடனும், பூரிப்புடனும் தமது அந்த அழகிய பெண் குழந்தையுடன் அவர்கள் தவறாது சனிக்கிழமை தோறும் சந்நிதியானிடம் வந்து செல்வதை நாம் தற்பொழுதும் காண முடிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகில் எல்லாவற்றையும் விட மேலானது இறைநம்பிக்கை. அந்த இறை நம்பிக்கையை உண்மையாகவும், உறுதியாகவும் கடைப்பிடிக்கும் பொழுது அதற்குரிய பயனையும் அடியார்கள் தவறாது பெற்றே வருகின்றனர். இவ்வாறான நிகழ்வுகள் இவ்வுலகில் எப்பொழுதும் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. அதுவும் சந்நிதியானது சந்நிதானத்தில் உண்மையான அடியவர்களுக்கு நிகழ்கின்ற இவ்வாறு அற்புதங்களை எம்மால் அளவிட்டுத்தான் கூறமுடியுமா?

ஆம்! திரு. திருமதி தவரூபன் சுமங்கலி குடும்பம் மட்டுமல்ல இவர்களைப் போல பல அடியார்கள் குழந்தைப்பேறு கிடைத்து தமது குழந்தைகளுடன் சந்நிதியானிடம் வந்து உள்ளம் உருகி வழிபட்டுச் செல்வதை காணமுடிகிறது.

ஓம் முருகா.



திரு. திருமதி தவரூபன் சுமங்கலி இருவரும் தமது குழந்தைக்கு பிரதம பூசகர் மூலம் திருநீறு பெற்று ஆசி பெறும் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் மூன்று

17.08.2011 சனிக்கிழமை நேரம் 9:30 மணியையும் தாண்டி பத்துமணி ஆகிக் கொண்டிருக்கிறது. அன்றைய தினம் சனிக்கிழமை என்பதால் வழமைபோல கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் திருமுழுக்குப் பூசைக்குரிய செயற்பாடுகள் எல்லாம் ஆரம்பித்து சுறுசுறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் நேரம் 10 மணியை அண்மித்து விட்ட நிலையிலும் அங்கே எதுவும் நடைபெறவில்லை. வழமைக்கு மாறாக ஒரு அமைதியான சூழ்நிலைதான் ஆலயத்தில் நிலவிக் கொண்டிருந்தது. ஆனாலும் ஆலயத்திற்குள் ஓரே ஒருவர் மட்டும் மிகுந்த ஆதங்கத்துடன் உலாவிக் கொண்டிருந்தார். ஆம் அன்றைய பூசையில் பிரதம குருவாகச் செயற்படும் ஞானம் ஐயா என அழைக்கப்படும் சுப்பிரமணிய ஐயர் ஞானசேகரம் ஐயா மட்டும் அங்கே தனித்துக் காணப்படுகின்றார்கள்.

அவருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை அது சாதாரண நாள் அல்ல திருமுழுக்கு நடாத்த வேண்டிய முக்கியமான நாள். விஷேடமாக நைவேத்தியம் தயாரித்தல், விநாயகர், மூலவர், நவக்கிரகங்கள், வள்ளி அம்மன் ஆகிய மூர்த்திகளுக்கெல்லாம் அபிஷேகங்கள் செய்தல் போன்ற காத்திரமான வேலைகள் எல்லாம் பூசை ஆரம்பமாவதற்கு முன்பு செய்யப்பட வேண்டும். இவற்றை எல்லாம் செய்வதற்கு வழமையாக சம்பந்தப்பட்டவர்கள் நேரத்திற்கு வந்து தங்கள் தங்கள் கடமைகளை செயற்படுத்த ஆரம்பித்து விடுவார்கள். அவ்வாறு எல்லோரும் வந்து ஒரு கூட்டுமுயற்சியாக செயற்பட்டால்தான் அன்றைய திருமுழுக்குப் பூசையை நிறைவாக செயற்படுத்தி முடிக்கலாம். ஆனால் இன்றோ வழமைக்கு மாறாக எவருமே இதுவரை வரவும் இல்லை வேலைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவும் இல்லை.

இன்று சனிக்கிழமை மட்டுமல்ல ஏறத்தாழ கடந்த ஒரு மாதகாலமாக ஞானம் ஐயாதான் இங்கே கனடா ஸ்ரீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வச்சந்நிதி ஆலயத்தில் பிரதம பூசகராக இருந்து பூசைச் செயற்பாடுகளை செயற்படுத்தி வருகிறார்கள். காரணம் ஆலய உரிமையாளரும் பிரதம பூசகருமாகிய பொன். புவனேந்திரம் ஐயா அவர்களும் அவருடைய பாரியாரும் அவசரமாக தாயாகத்திற்கு செல்லவேண்டிய தேவை ஏற்பட்டதால் அவர்கள் தாயாகம் சென்றுவிட்டார்கள். அதனால் இந்த ஒரு மாத காலமும் எல்லோருடைய ஒத்துழைப்புடனும் பூசைச் செயற்பாடுகளை ஞானம் ஐயாதான் செயற்படுத்தி வருகின்றார்கள். அது மட்டுமல்ல தனக்கே உரித்தான தனித்துவமான முறையில் சரியான நேரத்திற்கு பூசைச் செயற்பாடுகளை செயற்படுத்தி வந்த ஞானம் ஐயாவுக்கு இன்று மட்டும் எல்லாமே குழப்பமாகக் காணப்படுகின்றன.

திருமூர்த்திகளுக்கு அபிஷேகச் செயற்பாடுகளை ஞானம் ஐயாவுடன் இணைந்து செயற்படுத்துகின்ற ஆலய உரிமையாளர் புவனேந்திர ஐயருடைய மகன் செந்தூ ரன் இன்று அவருடைய படிப்பு தொடர்பான வேலைகள் காரணமாக ஆலயத்திற்கு மிகவும் தாமதமாகவே வருவதாக ஏற்கனவே அறிவித்திருந்தார். ஆகவே செந்தூரனை எதிர்பார்க்க முடியாது.

ஆனால் புவனேந்திரம் ஐயருடைய மூத்த மகன் கஜேந்திரனுடைய மாணவியாகிய மருமகள் பவித்திரா அவர்கள் வழமையாக இதுவரை ஆலயத்திற்கு வந்து நைவேத்திய செயற்பாடுகளை செய்ய ஆரம்பித்து விடுவார் ஆனால் அவரும் இதுவரை வரவில்லை. அது மட்டுமல்ல நைவேத்தியச் செயற்பாடுகள் மற்றும் பூசைச் செயற்பாடுகளில் தொண்டு செய்கின்ற தொண்டர்களும் கூட எவரும் இதுவரை வரவில்லை. ஆம்! எல்லாமே இன்று வழமைக்கு மாறாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதனால்தான் ஞானம் ஐயா தனி ஒருவராக ஆலயத்திற்குள் நின்று செயற்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எதைச் செய்வது? எப்படிச் செய்வது? எனக் குழப்பமடைந்து கொண்டிருந்தார்கள். அது மட்டுமல்ல நேரம் செல்ல செல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி இன்றைய சனிக்கிழமைக்குரிய திருமுழுக்குப் பூசையை முடிக்கப் போகிறேன் என்ற பதட்டமும், கலக்கமும், கவலையும் ஞானம் ஐயாவுக்கு ஏற்படத் தொடங்கியது.

இப்பொழுது அவருக்கு ஒன்று விளங்கியது இனிமேல் நான் மனிதர்களை நம்பிப் பயன் இல்லை. ஆலயத்திற்குள் நின்றுகொண்டிருந்த ஞானம் ஐயா அவர்கள் மூலஸ்தானத்திற்குள் இருக்கின்ற மூலவரான சந்நிதி முருகனையே நோக்கினார்கள். என்னப்பா முருகா! உனக்காகத்தானே நான் இங்கு தவியாய் தவித்துக் கொண்டிருக்கின்றேன் வழமைபோல திருமுழுக்குப் பூசையை நிறைவாகவும், நேரத்திற்கும் உனக்கு நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவே நான் இங்கே குழம்பிப் போய் இருக்கின்றேன். நீதானப்பா ஏதாவது வழி செய்ய வேண்டும் என தான் பூசிக்கின்ற கலியுககந்தன் சந்நிதி முருகனிடம் மருதர் கதிர்காமர் வழிவந்த ஞானம் ஐயா அவர்கள் வேண்டுதல் செய்தார்கள்.

சந்நிதி முருகன் கருணைக் கடலல்லவா? ஆபத்பாந்தவனல்லவா? அதுவும் தனது சந்நிதிதானத்தில் தனது பூசையை நிறைவாக நிறைவேற்றுவதற்காக வேண்டுதல் செய்கின்ற போது அதனை அவன் வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பானா? ஆம் கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்பதற்கிணங்க உடனடியாகவே ஞானம் ஐயாவுக்கு பயன் கிடைத்தது. யாமிருக்க பயமேன்! எனக் கேட்கின்ற சந்நிதி முருகன் உடனடியாகவே ஞானம் ஐயாவுடைய பயத்தையும் கலக்கத்தையும் போக்கினான்.

ஆம்! அங்கே அதிசயம் நடைபெற்றுவிட்டது ஞானம் ஐயா கேட்டது அங்கே கிடைத்துவிட்டது. அமைதி, அடக்கம், பக்தி, பண்பு அத்தனையும் நிறைந்த நடுத்தர வயதை தாண்டிய ஒரு அம்மையார் அங்கே ஆலயத்திற்கு வருகை தந்தார்கள். ஞானம் ஐயா எப்பொழுதுமே எங்குமே பார்த்திராத ஒரு அம்மையார் ஆலயத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் ஐயாவுக்கு எதுவுமே விளங்கவில்லை. ஆச்சரியமடைந்தார்கள். கூடவே மட்டற்ற மகிழ்ச்சியும் ஏற்பட்டது. அந்த அம்மையாரை வாருங்கள் அம்மா என வரவேற்றார்கள். அது மட்டுமல்ல அந்த அம்மையாரிடமே 'யார் அம்மா நீங்கள் என்று கேட்க அவரது உள்மனம் தூ ண்டினாலும் அவர் அவ்வாறு கேட்கவில்லை. ஆனால் பின்வருமாறு அந்த அம்மையாரிடம் கேட்டர்கள்

**'இப்பொழுது ஏன் அம்மா வந்தீர்கள்"**

**'இல்லை.... நான் கோயில் கும்பிடத்தான் வந்தனான்"**

என்று அந்த அம்மையார் அமைதியாக பதில் கூறினார். ஒரு சிறிய மௌனம் அங்கே நிலவியது. தொடர்ந்து அந்த அம்மையார் நவக்கிரகங்களுக்கு தண்ணீர் வார்க்கவேண்டும்... அதுதான்... என அடக்கமாகக் குறிப்பிட்டார்கள்.

அதற்கு ஞானம் ஐயா அப்படியா, நல்லது அம்மா இன்று சனிக்கிழமை திருமுழுக்குப் பூசை நடைபெறும் நாள். பூசை 12 மணிக்குத்தான் நடைபெறும் அப்பொழுதுதான் நீங்கள் நவக்கிரகற்களுக்கு தண்ணீர் வார்க்கலாம் என அந்த அம்மையாருக்கு எடுத்துக் கூறினார்கள். நவக்கிரகங்களுக்கு தண்ணீர் ஊற்ற என்று அந்த அம்மையார் குறிப்பிட்டதை மனதிற்குள் மீண்டும் ஒருமுறை உள்வாங்கிய ஞானம் ஐயா ஆகவே இவர் பூரண ஆசாரத்துடன்தான் வந்துள்ளார் என்பதையும் உறுதி செய்து கொண்டார். தொடர்ந்து அந்த அம்மையாரிடம் **"இங்கே எனக்கு உதவி செய்வீர்களா?"**எனக் கேட்டார்கள். அதற்கு அந்த அம்மையார் எந்த தயக்கமும் இன்றி சம்மதம் தெரிவித்தார்கள்.

அன்று நைவேத்தியங்களில் ஒரு முக்கிய அங்கமான பிட்டு தயார் செய்யவேண்டும். பிட்டு தயாரிப்பதற்குரிய ஆயத்தங்களில் ஞானம் ஐயா ஏற்கனவே ஈடுபட்டிருந்தார். இப்பொழுது அந்த வேலைகளை அந்த அம்மையாரிடம் ஒப்படைத்தார்கள். அதனை அந்த அம்மையார் நேர்த்தியாக செய்து முடித்தார்கள். ஞானம் ஐயா திருமூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்கின்ற வேலைகளை ஆரம்பித்து நடத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தார்கள். அப்பொழுது முக்கியமாக அபிஷேகம் செய்வதற்கு வேண்டிய தாராளமான நீரை வாளிகளில் காவி வந்து ஞானம் ஐயாவுக்கு வழங்குதல் உட்பட பல்வேறு வேலைகளையும் அந்த அம்மையார் மலர்ந்த முகத்துடன் செய்து கொண்டிருந்தார்கள்.

அடியேனும் சனிக்கிழமையான அன்று வழமை போல செல்கின்ற நேரமாகிய 10:30 மணியளவில் கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தை சென்றடைந்தேன். ஞானம் ஐயா அபிஷேகச் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அவருக்கு உதவியாக மேற்படி அம்மையார் செயற்பட்டுக் கொண்டிருப்பதையும் அவதானித்தேன். அடியேன் அங்கு சென்ற பின்பு அடியேனும் அவர்களுடன் ஒருவராக இணைந்து வழமையான எனது சில செயற்பாடுகளை அங்கே செய்ய ஆரம்பித்தேன்.

செந்தூரன், ஆலய உரிமையாளர் புவனேந்திர ஐயருடைய மருமகள் பவித்திரா ஆகியோர் அடியேன் ஏற்கனவே குறிப்பிட்டது போல வழமைக்கு மாறாக தாமதமாகவே ஆலயத்திற்கு வந்து சேர்ந்தனர். ஆனாலும் அவர்களும் தங்கள் தங்கள் செயற்பாடுகளை இறுதி நேரத்தில் இணைந்து வழமைபோல செயற்படுத்தினார்கள். ஏனையவர்களும் படிப்படியாக வந்து சேந்தனர். எல்லோருடைய ஒத்துழைப்பினாலும் நைவேத்தியச் செயற்பாடுகள், அபிஷேகச் செயற்பாடுகள், பூசைச் செயற்பாடுகள் எல்லாம் நிறைவாகவும், வழமையான நேரத்திற்கும் நடந்தேறியது. ஆம் அன்றைய நாளும் வழமையான திருமுழுக்குப் பூசை நாளாகவே நடைபெற்றது.

மருதர் கதிர்காமர் மரபில் வந்த ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பூசகர்கள் கதிர்காமத்தில் கப்புறாளைகள் போல இங்கே சந்நிதியானுக்கு பூசை செய்யும் பொழுது அதனை சந்நிதியானுக்கு செய்யும் தொண்டாகவே நினைத்து செயற்படுத்தி வருகின்றனர். இவ்வாறு இந்த பூசகர்கள் சந்நிதியானுக்கு பூசை செய்வதை தமக்கு கிடைத்த பேறாகவே கருதுகின்றனர். அதேபோல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியானும் மருதர் கதிர்காமர் காலம் தொடக்கம் இந்த பூசர்கர்களுக்கு வேண்டியவற்றை வேண்டிய நேரத்தில் கிடைக்கச் செய்கின்ற அற்புதங்களை அன்று தொடக்கம் இன்று வரை செய்து கொண்டுதான் இருக்கின்றான்

ஞானம் ஐயாவுக்கு ஆபத்பாந்தவராக வந்து உதவிய அந்த பெண்மணியை அன்றுதான் அடியேனும் கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் முதன் முறையாக சந்தித்தேன். அந்த அம்மையாரின் பெயர் சகுந்தலாதேவி. பிரம்ரன் என்ற மிகவும் தூர இடத்திலிருந்து வந்திருந்தார். முருகனுக்கு நேர்த்தி வைத்து நவக்கிரகங்களுக்கு அபிஷேகம் செய்வதற்கு நீண்ட நாட்களாக விரும்பியிருந்ததாகவும் அன்றைய தினம்தான் தன்னால் வரமுடிந்ததாகவும் அடியேனிடம் குறிப்பிட்டார். அவர் குறிப்பிட்டது போல தொடர்ந்து பல சனிக்கிழமைகள் ஆலயத்திற்கு வந்து நவக்கிரகங்களுக்கு நீர் ஊற்றினார்கள். இறுதியாக தனது நேர்த்தியை 2012 ஜனவரி மாதம் ஒரு சனிக்கிழமை முழுமையான அன்னதானச் செயற்பாட்டுடன் பூரணமாக நிறைவு செய்தார்கள்.


இந்த அம்மையார் தொடர்ந்து பல சனிக்கிழமைகள் ஆலயத்திற்கு வருகை தந்துள்ளார்கள். தற்பொழுதும் அவ்வப்பொழுது ஆலயத்திற்கு வந்து செல்கின்றார். ஆனால் முதல் நாள் வந்தது போல அதன் பின்பு அவ்வளவு வேளைக்கு ஆலயத்திற்கு அந்த அம்மையார் வருகை தந்ததை அடியேன் ஒரு போதும் காணவில்லை.

ஆம்! சந்நிதியான் கலியுகக்கந்தன் அல்லவா அடியவர் வடிவிலே அடியவர் ஊடாக தாயகத்தைப்போல் இங்கேயும் பல அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டுதான் இருக்கின்றான்.


- ஓம் முருகா -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2013 சந்நிதியான் உற்சவத்தில் சுப்ரமணிய ஐயர் ஞானசேகரம் ஐயா அவர்கள் பிரதம பூசகருடன் இணைந்து கொடியேற்ற சடங்குகளை மேற்கொள்ளும் காட்சி



ஜேர்மன் சுவாமி கௌரிபாலா (1907-1984)வுடன் மயில்வாகனம் சுவாமிகளின் அருள்தோற்றம்



சுவாமி கௌரிபாலா (1981) ஜேர்மன் சுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் நான்கு

கடல் கடந்த நாடுகளில் ஈழத்தமிழர் அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கும் நாடாக கனடா நாடு விளங்கிக் கொண்டிருக்கின்றது. மூன்று இலட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் கனடா நாட்டில் மிகக் கூடுதலான மக்கள் ரொறன்ரோ நகரத்தையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதற்கடுத்ததாக ஈழத்து தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதியாக மொன்றியல் நகரப்பகுதியைக் குறிப்பிடலாம்.

பல்வேறு இன மக்களும் இனமொழி மத ரீதியாக தங்கள் தங்கள் தனித்துவங்களை பேணி வேற்றுமையில் ஒற்றுமையாக அதேநேரம் முழுமையான திருப்தியுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் சிறந்த நாடாக கனடா விளங்குகின்றது. இன்று பல நாடுகளில் மக்கள் உள்நாட்டில் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு பல்வேறு போராட்டங்களை நிகழ்த்திக் கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம். ஆனால் அதேநேரம் பல்வேறு நாட்டு மக்கள் கனடா நாட்டிற்குள் எல்லாவகயான சுதந்திரங்களுனடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு வித்தியாசமான சூழலை நாம் இங்கே காணமுடிகின்றது. அது மட்டுமல்ல பல்லினச் சமூகத்தவர்கள் வாழும் இந்நாட்டில் ஒவ்வொரு மதத்தவர்களும் தமது ஆலயங்களை சுதந்திரமாக அமைப்பதற்கும் அவற்றை செயறபடுத்துவதற்கும் உற்சவங்கள் போன்ற விழாக்களை நடாத்துவதற்கும் முழுமையாக சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இத்தகைய சூழ்நிலை உள்ள கனடா நாட்டில் ரொறன்ரோ நகரில் ஸ்காபறோ பகுதியில் கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் மூலஸ்தானம், மூலவர் மற்றும் வள்ளியம்மன், ஆறுமுகசாமி ஆகிய மூர்த்திகளீன் உருவங்களும் தாயகத்தில் உள்ள ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் உள்ள மூர்த்திகளின் தோற்றங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்தவையாக காணப்படுகின்றன. அதுமட்டுமல்ல இவ்வாலயத்தில் மருதர் கதிர்காமர் பரம்பரை வழிவந்த பொன்னுத்துரை ஐயர் புவனேந்திர ஐயர் பூசகராக செயற்பட்டுக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. தாயகத்தில் பரம்பரை பரம்பரையாக சந்நிதி முருகனை வழிபட்டு வந்த அடியார்கள் அதே பக்தி உணர்வுடன் கனடா நாட்டில் உள்ள இவ்வாலயத்திலும் வழிபடுகின்றனர். அதேபோல அன்னதானம், அபிசேகம் போன்ற செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாலயத்தில் வருடாவருடம் வைகாசி மாதத்தில் இடம்பெற்றுவரும் 1008 சங்காபிசேக நிகழ்வும் மிகவும் பக்திப்பரவசத்துடன் இடம்பெற்றுவரும் ஒரு நிகழ்வாகும். உலகம் முழுவதும் பரந்து வாழும் தனது அடியவர்களுக்கு சந்நிதி முருகன் தினம் தினம் தனது அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றான். இதேபோன்று கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இந்த 1008 சங்காபிசேக நிகழ்வில் முக்கிய குருக்களில் ஒருவராக செயற்பட்டு வரும் விசாகரத்தின ஐயர் நாகேந்திர ஐயருக்கு 2010 ஆம் ஆண்டு நிகழ்த்திய அற்புத நிகழ்வொன்றை இத்தொடரில் அடியாார்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

மருதர் கதிர்காமர் பரம்பரை வழிவந்த விசாகரத்தின ஐயர் நாகேந்திர ஐயர் கொழும்பில் கணக்காளராக கடமையாற்றியவர். நாட்டுச் சூழலால் தற்பொழுது கனடாவில் மொன்றியல் நகர முருகன் ஆலயத்தில் முகாமையாளராக தொழில் புரிந்து வருகின்றார். இளமைக் காலத்தில் இருந்தே சந்நிதியான் சிந்தனையுடனும் அதே நேரம் தர்மநெறியுடனும் வாழ்ந்துவரும் நாகேந்திர ஐயருக்கு சந்நிதியானும் அவருடைய வாழ்க்கைப் பயணத்தில் பல அற்புதங்களை நிகழ்த்தி வருவதை நாம் காணமுடிகின்றது.

கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வருடா வருடம் இடம்பெற்றுவரும் இந்த 1008 சங்காபிசேக நிகழ்வினை அவ்வாலயத்தில் பிரதம பூசகர் பொ. புவனேந்திர ஐயரும் மேற்படி நாகேந்திர ஐயரும் இணைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுத்தி வருவது வழக்கம். ஆம் ரொறன்ரோ நகரத்தில் உள்ள கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து மிக நீண்ட தூரத்தில் அமைந்துள்ள வேறொரு நகரமான மொன்றியல் நகரில் நாகேந்திர ஐயர் வசித்தாலும் இந்த 1008 சங்காபிசேக நிகழ்வை செயற்படுத்துவதற்காக அவர் இங்கே வருடாவருடம் வருவது வழக்கம்.

சந்நிதியானுக்குச் செய்கின்ற கைங்கரியங்கள் ஒவ்வொன்றையும் சந்நிதியானது பூசகர்கள் மிகவும் கவனமாகவும் தூய்மையாகவும் செயற்படுத்தி வருவதை அடியார்கள் அவதானிக்க முடியும். இதே போன்றுதான் நாகேந்திர ஐயரும் இவற்றையெல்லாம் தனது மூதாதையர்க்ள மூலம் நன்கு அறிந்தும் தெரிந்தும் ஆலயத்தில் நேரடியாக அனுபவத்தால் உணர்ந்துகொண்ட ஒருவர். அது மட்டுமன்றி இன்றுவரை அவற்றை இறுக்கமாகக் கடைப்பிடித்து வருகின்ற ஒரு தூய்மையான பூசகர். இத்தகையதொரு தூய்மையான சிந்தனையும் செயற்பாடும் உள்ளவர்கள் உடனேயே சந்நிதியானது திருவிளையாடல்களும் அதிகமாக இடம்பெற்று வருவதை அடியார்கள் அறிவார்கள்.

திரு நாகேந்திர ஐயர் அவர்கள் கொழும்பில் கணக்காளராக கடமையாற்றியதன் காரணமாக கடந்த ஒருசில தசாப்தங்களாக சந்நிதியில் பூசராக செயற்படமுடியாது போய்விட்டது. ஆனாலும் பூசகருக்கு உரிய ஆசாரங்களை முழுமையாக கடைப்பிடித்து சந்தியானின் அடிமையாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற சிறப்புக்குரியவர்.

2010 மே மாதம் அந்த சனிக்கிழமை கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் சாயரட்சப் பூசை முடிவடைந்துவிட்டது. இப்பொழுது மறுதினம் ஞாயிற்றுக்கிழமை 1008 சங்காபிசேக நிகழ்வு நடைபெறுவதற்குரிய செயற்பாடுகள் களைகட்டத் தொடங்கிவிட்டது. சங்குகள் அபிசேகத் திரவியங்கள், பூசைப்பொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்களும் ஆலயத்திற்கு வந்து சேர்ந்துவிட்டன. அத்துடன் ஆலயம் முழுவதும் துப்புரவு செய்யப்பட்டு கழுவி தூய்மையாக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. அனைத்து விக்கிரகங்களும் தூய்மையாக்கப்பட்டு புதுப்பொலிவுடனும் நிறைவுடனும் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. மூலவருக்கு எதிரே உள்ள அந்த அழகான மண்டபத்தில் வழமைபோல 1008 சங்காபிசேக நிகழ்வை மறுதினம் நடாத்துவதற்குரிய அமைப்பு வேலைகள் அங்கே சுறுசுறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இரவு 12 மணியை தாண்டிவிட்டது. கழுவித்துப்புரவு செய்யப்பட்டு பின் மஞ்சள் நீரால் தூய்மையாக்கப்பட்ட 1008 சங்குகளும் அங்கே ஆயித்தமாக காணப்படுகின்றன. இந்த சங்குகளை எல்லாம் விதிமுறைப்படி சரியான அமைப்பில் நேர்த்தியாக அவற்றை ஒழுங்குபடுத்தி அடுக்குவதற்கு வழிகாட்டியும் அதேநேரம் அவர்களுடன் இணைந்தும் நாகேந்திர ஐயர் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு ஒழுங்காக அடுக்கப்பட்ட ஒவ்வொரு சங்குகளுக்குள்ளும் அபிசேகத் திரவிய நீர் ஊற்றப்பட்டும் மாவிலைகள் தவறாது வைக்கப்படும் செயற்பாடுகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதைத்தொடர்ந்து சங்காபிசேகத்திற்குரிய ஒவ்வொரு சங்குகளுக்குள்ளும் ஒவ்வொரு நாணயம் வைக்கப்படவேண்டுமென்ற விதிமுறைக்கு இணங்க அதற்குரிய முன்னாயத்தங்கள் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆம் அதற்காக ஒரு தாம்பாளத்தில் நாணயங்கள் அடுக்கப்பட்டு மண்டபத்தின் ஓரத்தில் வைக்கப்பட்டிருந்தன. அனைத்தும் கனடா நாட்டின் ஒரு சதக்குத்திகள். அந்த செப்புக்குத்திகள் ஒவ்வொன்றும் கண்ணைப் பறிக்கும் வகையில் தாம்பளத்தில் யொலித்துக் கொண்டிருந்தன. இவ்வாறு யொலித்துக் கொண்டிருப்பதை அவதானித்த சிலர் இவை அனைத்தும் புதிய காசுகளாக தோன்றுகின்றனவே எப்படி பளபளக்கின்றன என தமக்குள் பேசிக்கொண்டனர். இவ்வாறு அவர்கள் தமக்குள் பேசுவதை தற்செயலாக அவதானித்த நாகேந்திர ஐயர் இவை அனைத்தும் பழைய காசுகள்தான் என அவர்களுக்கு பதில் கூறிவிட்டு மீண்டும் வேலைக்குள் மூழ்கிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அந்த செப்புக்குத்திக் காசுகளும் ஒரு தட்டில் ஒன்றாக பளபளத்துக் கொண்டிருப்பதை மீண்டும் உற்றுநோக்கிய சில அடியார்கள் அவை பழைய நாணயக்குற்றிகள் என்பதை நம்பமறுக்கின்றனர் என்பதை அவர்களது முக உணர்வுகளும் உரையாடலகளும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. இப்பொழுது நாகேந்திர ஐயர் மீண்டும் அவர்களை நோக்கி இல்லை இல்லை எல்லாம் பழைய குற்றிகள்தான் என்பதை விளக்கமாக எடுத்துக்கூறினார்கள். நான் இவற்றையெல்லாம் ஒவ்வொன்றாக புளிபோட்டு நன்றாக தேய்த்து கழுவி இங்கே புதுப்பொலிவுடன் வைத்துள்ளேன் என்ற விபரத்தை அவர்களுக்கு எடுத்துக்கூறினார்கள். இவ்வாறு அங்கே 1008 சங்குகளுக்குள்ளும் தவறாது ஒவ்வொரு குற்றி நாணயங்களை வைக்கும் வேலைகள் ஆரம்பமாகியது. இவ்வாறு வைக்கப்படுவதை நாகேந்திர ஐயர் தானே மேற்பார்வை செய்து உறுதிப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

இவர்களுடன் ஒருவராக அங்கே செயற்பட்டுக் கொண்டிருந்த அடியேன் மேற்படி சம்பவங்களை அமைதியாக உள்வாங்கிக் கொண்டிருந்தேன். இந்த பரப்பரப்பான சூழ்நிலை சற்று தணிந்த பின்பு ஏற்கனவே எனக்கு அறிமுகமான நாகேந்திர ஐயருடன் இதுபற்றி உரையாடினேன். அவர் என்னிடம் இவையெல்லாம் சந்நிதியானுடைய காரியங்கள் மாஸ்டர், எல்லாவற்றையும் நாம் ஆலயத்தில் தூய்மையாகத்தான் செய்யவேண்டும் என அடியேனுக்கு எடுத்துக்கூறினார்கள். இவ்வாறு அர்ப்பணிப்புடனும் தூய்மையுடனும் செயற்படுவது எமது கடமை. இவ்வாறு செயற்படும் போதுதான் சந்நிதியானுக்கு நாம் செய்யும் காரியங்கள் நிறைவுள்ளதாக அமையும் என்பதையும் சுட்டிக்காட்டினார்கள்.

இதனால் தான் பல கைகள் மாறி பல இடங்களில் பயன்படுத்தப்பட்ட இந்த நாணயங்களை இங்கே ஆலயத்தில் கிரியைகளுக்குப் பயன்படுத்தும் பொழுது அவை சுத்தமாகவும் புதுப்பொலிவுடனும் இருப்பதற்காக நானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளிபோட்டு நன்றாகத் தேய்த்து மினுக்கி இங்கே தயாராக வைத்திருக்கின்றேன் எனவும் அடியேனிடம் நாகேந்திர ஐயர் எடுத்துக் கூறினார்கள் அதுமட்டுமல்ல இவ்வாறாக நாம் சந்நிதியானுக்கு தூய்மையாகச் செயற்படும் பொழுது சந்நிதியானும் எங்களில் தானும் ஒருவனாகச் செயற்பட்டு தனது பங்களிப்பை செய்கிற திருவிளையாடல்களை நிகழ்த்தி வருவதை எமது மூதாதையர்கள் எமக்கு எடுத்துக் கூறி வந்துள்ளார்கள். இவற்றை எல்லாம் எனது வாழ்நாளில் நானும் உணர்ந்து கொண்டுள்ளேன் என உள்ளம் உருக அடியேனிடம் எடுத்துக் கூறினார்கள். அது மட்டுமல்ல இப்பொழுது கூட இந்த 1008 சங்காபிஷேகச் செயற்பாட்டில் சந்நிதியான் தனக்கு நிகழ்த்திய அந்த திருவிளையாடல்களை அடக்கமாக அடியேனுடன் பகிர்ந்து கொண்டார்கள்.

2010 ஆம் ஆண்டு மே மாதம் ஞாயிற்றுக்கிழமை கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெற இருக்கின்ற அந்த 1008 சங்காபிஷேகத்தில் பயன்படுத்துவதற்கான இந்த 1008 ஒரு சதக் குத்திகளை ஏறத்தாள மூன்று வாரங்களுக்கு முன்பிருந்தே நகேந்திர ஐயர் சேகரிக்கத் தொடங்கி விட்டார்கள். இப்பொழுது 1008 சங்காபிஷேகத்திற்கு இன்னும் ஒரு வாரம்தான் இருக்கிறது நகேந்திர ஐயர் தான் கடமையாற்றும் மொன்றியல் முருகன் ஆலயத்தின் கருமபீடத்தில் தனக்கே உரித்தான இயல்பான அந்த அடக்கமான சுபாவத்துடன் அமர்ந்திருந்து செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள் அப்பொழுது தான் அங்கே அந்த அற்புதம் அரங்கேறியது.

ஆம் நகேந்திர ஐயர் கடமையாற்றும் அந்தக் கருமபீடத்திற்கு வயது முதிர்ந்த அந்த அம்மையார் வந்தடைந்தார்கள் அவ்வாறு வந்தடைந்தவர் அர்ச்சனை செய்வதற்கு ஒரு பற்றுச்சீட்டு தருமாறு நகேந்திரர் ஐயரிடம் கேட்டுக் கொண்டார்கள் நகேந்திரர் ஐயர் அர்ச்சனைக்குரிய ரிக்கற்றை அவரிடம் கொடுக்க முயன்றபொழுது அந்த அம்மையார் பணத்தை எடுப்பதற்கு தனது மணிப்பேசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்து பணத்தை தருவார் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அந்த அம்மையார் மணிப்பேசை திறப்பதற்குப்பதிலாக தான் கையில் வைத்திருந்த கூடைக்குள் கையை விட்டு எதையோ தேடத் தொடங்கியிருந்தார்கள். இறுதியாக அந்தக் கூடைக்குள் இருந்த ஒரு முடிச்சினைக் கையில் எடுத்தார்கள். ஆம் அது ஒரு பொற்கிளி. அந்தப் பொற்கிளியான முடிச்சினை நகேந்திர ஐயரிடம் கையளித்தார்கள். அர்ச்சனைக்கான துண்டினை வழங்கி பொற்கிளியான முடிச்சினை நகேந்திர ஐயர் பெற்றுக்கொண்டார்கள்.

அதற்குள் குத்தி நாணயங்கள் இருப்பதை நகேந்திர ஐயர் உணர்ந்து கொண்டார்கள். சரி அவர் வழங்கிய குத்தி நாணயங்களை எண்ணுவோம் என நினைத்து அவற்றை எண்ணுவதற்காக திறந்து பாாத்தார்கள். அவரது கண்களை அவராலேயே நம்பமுடியாது ஆச்சரியப்பட்டார்கள். ஆம் அவை அனைத்துமே கனடா நாட்டு ஒருசதக்குத்திகள். நடந்து கொண்டிருக்கும் அந்நிகழ்வு நிஜம்தானா என ஒரு கணம் அவருக்கு சந்தேகம் ஏற்பட்டது. தன்னை சுதாகரித்துக் கொண்ட நகேந்திர ஐயர் நடந்து கொண்டிருப்பது நிஸம்தான் என உணர்ந்து கொண்டார்கள். ஆம் தான் எந்த விடயத்தை சிந்தித்துக்கொண்டு எதனைச் செயற்படுத்த வேண்டும் என்று செயற்பட்டுக் கொண்டிருக்கிறேனோ அதேவிடயம் அங்கே இயல்பாக கச்சிதமாக நடந்தேறுகின்ற அதிசயம் நடப்பதை நகேந்திர ஐயர் தெட்டத் தெளிவாக உணர்ந்து கொண்டார்கள். தனது வேலையை இலகுவாகச் செயற்படுத்தி முடிப்பதற்கு வசதியாக இந்த ஒருசதக் குத்திகளை சந்நிதியான் தன்னிடம் சேர்ப்பித்து விட்ட அந்த அற்புதத்தையும் அவனது கருணையையும் தெளிவாக உணர்ந்து கொண்டார்கள்.

அவரது கண்கள் அவரை அறியாமலேயே குளமாகியது. ஆம் அவரது உள்ளம் மட்டுமல்ல உடலும் ஆனந்தப் பரவசம் அடைந்தது.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூசகர் வி. நாகேந்திரம் ஐயர் அவர்கள் பிரதம பூசகருடன் இணைந்து கொடியேற்ற உற்சவத்தை முடித்த நிலையில் இருவரும் எழுந்தருளி வேலவனுக்கு முன்பாக மகிழ்வுடன் உரையாடும் காட்சி - 2013



முதல் நாள் உற்சவத்தில் விநாயகப் பெருமானுக்கு பூசைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது - 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் ஐந்து

1980 ஆம் ஆண்டு தசாப்தத்தின் ஆரம்பகால கட்டம். தென்னிந்தியாவில் உள்ளது போன்று 45 அடி உயரமுடைய பிரமாண்டமான அமைப்பும், 500க்கு மேற்பட்டதுமான சிற்பங்களை உள்ளடக்கியதுமான அந்த அழகிய சித்திரத்தேர் அமைக்கும் செயற்பாடுகள் தேர்க்கொட்டகைக்குள் சுறுசுறுப்பாக இடம்பெற்றுக் கொண்டிருந்தது. ஆம் சந்நிதியான் ஆலய வீதியில் வடகிழக்குத் திசையாக அமைந்துள்ள அந்த கொட்டகைக்குள் ஒரு பக்கத்தில் தேர்க்கட்டுமாணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இன்னொரு பக்கத்தில் தென்னிந்திய சிற்பாசிரியர்கள் பார்ப்போரை வியப்பில் ஆற்றும் வகையில் அந்த கலையம்சங்கள் பொதிந்த சிற்பங்களை வெகுலாவகமாக மரத்தில் செதுக்கிக் கொண்டிருந்தனர்.

அதேநேரம் இங்கே ஆலய வாசல் பக்கமாக கிழக்கு வீதியில் தேர்முட்டிக்குள் அமைந்திருந்த தேர்த்திருப்பணி காரியாலயத்திற்குள் திருப்பணிச் சபையினர் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். சந்நிதியானை தரிசிக்க வருகின்ற அடியவர்களை அடித்தளமாகக் கொண்டு அவர்கள் வழங்குகின்ற அந்தத் திருப்பணி நிதியை பெருமளவு நம்பியே அந்தப் பிரமாண்டமான சித்திரத்தேர் அமைக்கும் செயற்பாட்டை அவர்கள் மேற்கொண்டு வந்தனர்.

சந்நிதியானை தரிசிக்க வருகின்ற ஒவ்வொரு அடியவரது கவனத்தையும் ஈர்த்து அவர்களிடமிருந்து கிடைக்கும் அந்த சிறிய சிறிய பங்களிப்புகளையும் தேர்த் திருப்பணிச் சபையினர் மிகவும் விருப்பத்துடன் பெற்றுக் கொண்டிருந்தனர். அதேபோல மிகச்சிறிய பங்களிப்புகளை வழங்குகின்ற அந்த அடியவர்களும் தங்களது பங்களிப்பும் தேர்த்திருப்பணியில் சேருகின்றது என்பதால் அவர்களும் மனநிறைவைப் பெற்றுக்கொள்கின்றனர் என்பதை அவர்கள் உணர்வுகள் வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. ஆம்! பெறுகின்றவர்களும் வழங்குகின்றவர்களும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவான மனநிறைவை அடைகின்ற அருமையான அந்த நிகழ்வு சந்நிதியான் வாசலிலே நாள்தோறும் நடந்தேறிக் கொண்டிருந்த காலகட்டம் அது. அது மட்டுமல்ல சந்நிதியானைத் தரிசிக்க வருகின்ற சிறியவர்கள், பெரியவர்கள், ஆண்கள், பெண்கள் எல்லோருமே சந்நிதியானை வழிபட்ட பின் அந்தத் தேர்க்கொட்டகைக்குள் சென்று நூதனமாகவும், சுறுசுறுப்பாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சந்நிதியானது தேர்க்கட்டுமாணப் பணிகளை பார்த்துச் செல்வது அவர்கள் அனைவருக்கும் மனத்திருப்தியை அளிப்பதாகவும் அமைந்திருந்தது.

தேர்த் திருப்பணிச்சபையினர் ஆலயத்தில் மட்டுமல்ல எங்கெங்கே தேர்த்திருப்பணிக்கான நிதியினைத் தாங்கள் சென்று சேகரிக்க முடியுமோ அவ்விடங்களுக்கு எல்லாம் சென்று அந்தந்த சூழ்நிலைக்கேற்ப நிதியினைப் பெற்றுக்கொண்டிருந்தனர். இவ்வாறான ஒரு செயற்பாட்டிற்காகத்தான் அன்று காலையும் திருப்பணிச்சபை அங்கத்தவரான திரு. இ. ஸ்ரீதரன், திரு. அருணாசலம் உட்பட மூவர் முன் ஆயத்தங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். ஆம்! இடைக்காட்டுப் பிரதேசத்திற்குச் சென்று பிடி வெங்காயம் சேகரிக்கும் செயற்பாட்டிற்காக அவர்கள் மூவரும் ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். எவ்வாறு எமது மூதாதையர்கள் பிடியரிசி சேர்த்து ஆலயங்களையும், வித்தியாலயங்களையும் தங்கள் தங்கள் கிராமங்களில் நிர்மாணித்தார்களோ அதேபோன்று இங்கே சந்நிதியானது சித்திரத்தேரை அமைப்பதற்காக இடைக்காட்டுக் கிராமத்திலும் பிடி வெங்காயம் சேகரிக்கும் செயற்பாட்டிற்காக இவர்கள் புறப்பட்டுச் சென்றனர்.

சந்நிதியானது அமைவிடமான தொண்டைமானாற்றுக்கு அண்மையில் அமைந்திருக்கின்ற சந்நிதியானது மெய்யடியார்கள் நிறைந்த கிராமம் இடைகாட்டுக் கிராமமாகும். இடைக்காட்டு கிராமத்து விவசாயிகள் எல்லோரும் தங்கள் தங்கள் குலதெய்வமாக சந்நிதியானை நினைத்து தாராளமாக பிடி வெங்காயங்களை வழங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

289486

வந்தனர். கடந்த வருடமும் தேர்த்திருப்பணிசபையினர் இதேபோன்று வெங்காய அறுவடை நடைபெறும் அக்காலப்பகுதியில்தான் இடைக்காட்டுக் கிராமத்திற்கு சென்று அவ்வாறு பிடி வெங்காயத்தைப் பெற்றுக் கொண்டனர்.

இந்த வருடமும் வெங்காய அறுவடை நடைபெற்றுக் கொண்டிருக்கும் அக்காலகட்டத்தில் இடைக்காட்டுக் கிராமத்திற்கு தேர்த்திருப்பணிச்சபையினர் சென்றடைந்தனர். அக்கிராமத்தில் பொதுத்தொண்டில் ஈடுபடுபட்டுவரும் நடுத்தர வயதை உடைய கந்தசாமி என்ற அன்பர் ஒருவரும் வழமைபோல் இவர்களுடன் பிடிவெங்காயம் சேகரிக்கும் செயற்பாட்டில் இணைந்து கொண்டார். அதன்பின் அந்த நால்வரும் ஒவ்வொரு வீடாகச் சென்று தமது வரவை அவர்களுக்கு வெளிப்படுத்தி பிடிவெங்காயத்தை அவர்கள் வழங்குவதற்கான ஒப்புதல்களை பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகளில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அவ்வாறு அந்த நால்வரும் ஒவ்வொரு வீடாகச் செல்லும் பொழுதுதான் அந்த வீட்டில் அந்த அதிசயம் அங்கே அரங்கேறியது. இவர்கள் அந்த அன்பர் வீட்டு வாசல் கதவை தட்டியதுதான் தாமதம் அந்த விட்டிற்குள் இருந்து வீட்டின் உரிமையாளர் வெளியே வந்தார். திருப்பணி சபையினர் ஏனைய வீட்டுக்காரர்களிடம் கேட்டது போல இந்த வீட்டுக்கார அன்பரிடமும் சந்நிதியானது தேர்த்திருப்பணிக்கு பிடி வெங்காயம் சேகரிக்க வந்திருக்கின்றோம் என எடுத்துக் கூறினார்கள். அதற்கு அந்த அன்பர் இவர்கள் சற்றும் எதிர்பாராத ஒரு பதிலை கூறினார். **“ஆம் நீங்கள் வருவீர்கள் என்று எங்களுக்கு தெரியும்”** என்று திருப்பணி சபையினரைப் பார்த்துக் கூறினார்.

திருப்பணிச் சபையினருக்கு குழப்பம் ஏற்பட்டது. ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். நாங்கள் யார் யார் இங்கே இன்று இடைக்காட்டிற்கு வருவோம் என்று இன்று காலையில்தான் எங்களுக்கே சரியாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியும். இந்த நிலையில் **“நீங்கள் வருவீர்கள் என்று எங்களுக்குத் தெரியும்”** என்று எங்களைப் பார்த்து இந்த அன்பர் கூறுகின்றாரே என்பதைச் சிந்தித்துப் பார்த்தபொழுது திருப்பணி சபையினருக்கு உண்மையில் குழப்பம் ஏற்பட்டது. ஆனாலும் அந்த அன்பர் அவ்வாறு கூறிய பாங்கினைச் சிந்தித்துப் பார்த்தபொழுது அது தேர்த்திருப் பணிச்சபை அங்கத்தவர்களுக்கு வியப்பையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியது.

எனவே திருப்பணிச்சபை அங்கத்தவர்கள் அந்த அன்பரிடம் நாங்கள் வருவோம் என்று உங்களுக்கு எப்படித் தெரியும் என்று கேட்டனர். அதற்கு அந்த அன்பர் திருப்பணிச்சபை அங்கத்தவர்களில் ஒருவரான திரு. ஸ்ரீதரன் அவர்களைச் சுட்டிக்காட்டி **“நீங்கள் வருவீர்கள் என்று சந்நிதியான் காட்டினவர்”** என்று பதில் கூறினார்.

ஸ்ரீதரன் உட்பட அங்கே சென்ற அனைவரும் ஆனந்தப் பரவசமடைந்தனர். சந்நிதியான் தனது தொண்டருக்கு தொண்டராகவும், அடியவருக்கு அடியவராகவும் தொழிற்பட்டு அவர்களை ஆனந்தப் பரவசமடையச் செய்வதை ஏற்கனவே அறிந்திருந்தாலும் இப்பொழுது அங்கே அனைவரும் அவனது திருவிளையாடலை நேரடியாக உணர்ந்துகொள்ளும் பேற்றினைப் பெற்றனர்.

தொண்டைமானாற்றை சொந்த இடமாகக் கொண்ட திரு. ஸ்ரீதரன் அவர்கள் திருப்பணிச்சபையில் உயிரோட்டமுள்ள ஒரு உறுப்பினராகச் செயற்பட்டவர். அத்துடன் சந்நிதியானுடைய திருவருளுக்கு பாத்திரமான ஒரு அன்பர். திரு. ஸ்ரீதரன் அவர்கள் தேர்த்திருப்பணி வேலை தொடர்பாக எந்த இடத்திற்கு அலுவலாகப் புறப்பட்டாலும் சந்நிதியானது வாசலுக்கு சென்று முருகா! நான் இன்று இந்த இடத்திற்குச் செல்கிறேன், நீயும் என்னுடன் கூட வந்து தோன்றா துணையாகச் செயற்படு என்று கூறித்தான் புறப்பட்டுச் செல்வது வழமை. அன்றும் அதேபோலத்தான் சந்நிதியான் வாசலுக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சென்று அவனை வணங்கி இன்று நான் இடைக்காட்டுக் கிராமத்திற்குச் செல்கின்றேன் என்னுடன் கூட வந்து அங்கே எல்லாம் நல்லபடியாக நடப்பதற்கு உதவவேண்டும் என்று அவனது ஆசியுடன் தான் இடைக்காட்டுக் கிராமத்திற்குச் சென்றார்கள்.

ஆம்! முக்காலமுமுணர்ந்த அந்த பரம்பொருள், கலியுக கந்தன் சந்நிதியான் முதல் நாள் இரவே இடைக்காட்டு அன்பருக்கு திரு. ஸ்ரீதரனும் ஏனையவர்களும் வருவார்கள் என்பதை கனவிலே காட்டிய விந்தையை எப்படி நாம் வார்த்தைகளால் விளக்கமுடியும்?

நாம் செய்கின்ற காரியங்கள் எமது காரியங்கள் அல்ல இவை சந்நிதியானது காரியங்கள் என்பதை உணர்ந்து உண்மையான விசுவாசத்துடனும் உணர்வுபூர்வமாகவும் அர்ப்பணிப்புடனும் செயற்படும்பொழுது அவை நிஜமாகவே அவனது காரியங்களாக மாறிவிடுகின்றன. திரு. ஸ்ரீதரனுக்கும் அன்று அதுதான் நடந்தது.

திரு. இ. ஸ்ரீதரன் அவர்களது வாழ்க்கைப் பாதையில் இதுபோன்ற ஏராளம் அற்புதங்கள் இடம்பெற்றுள்ளன. உள்ளத்தை உருக்குகின்ற இவ்வாறான பசுமையான பரவசமான அற்புத நினைவுகளுடன் அவர் தற்பொழுது கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

- ஓம் முருகா -



சந்நதியான் தேரேறி வரும் அழகிய காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் ஆறு

30.08.2010 திங்கட்கிழமை பி.பகல் 7:00 மணி ஆகிக்கொண்டிருக்கிறது. கனடாவில் ரொரன்ரோ நகரில் அமைந்துள்ள ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற வருடாந்த உற்சவத்தை தொடர்ந்து இடம் பெறும் குளிர்த்தி அபிஷேகத்திற்குரிய ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பால், பழங்கள் முதலிய அபிஷேகத் திரவியங்கள் அனைத்தும் வந்துசேர்ந்து விட்டன. பிரதம பூசகர் பொ. புவனேந்திரன் ஐயர் அவர்கள் மூலவரின் மூலஸ்தானத்தில் சில முன் ஆயத்தங்களை சுறுசுறுப்புடன் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதே நேரம் ஆலயத்திற்கு வெளியே ஆலயத்துடன் இணைந்ததாக அமைந்துள்ள அந்த பூங்கொல்லையில் மூவர் தமக்கிடையே உரையாடிக் கொண்டிருக்கின்றனர். தொண்டைமானாற்று சூழலைச் சேர்ந்த இந்த மூவரும் அபிசேகத்திற்குரிய சில கடமைகளை ஆலயத்திற்குள் முடித்து விட்ட நிலையில் சிறிதுநேரம் இவ்வாறு வெளியே உரையாடிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் தமது இளமைக் காலம் பற்றியும், தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம், ஆலயச்சூழல் அவற்றின் சிறப்புக்கள் தொடர்பாகவும் மகிழ்ச்சியுடன் தமக்கிடையே பரஸ்பரம் உரையாடிக் கொண்டிருக்கின்றனர்.

கனடாவில் இந்தக் காலகட்டம் வசந்தகாலமாக இருந்ததால் ஆலயத்துடன் அமைந்திருக்கும் அந்தப் பூங்கொல்லையில் அழகிய சூரியகாந்தி, செவ்வந்தி, றோசா என பலவகையான மலர்களும் பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கின்றன. பூங்கொல்லையிலிருந்து வந்த நறுமணமும் சேர்ந்து அந்த பகுதியை ரம்மியமாக்கிக் கொண்டிருக்கின்றது. இவ்வாறு கனடாவில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமும், ஆலயத்துடன் இணைந்திருந்த அந்தப் பூங்கொல்லைப் பகுதியும் அந்த மாலைப் பொழுதில் அழகாகவும், அமைதியாகவும், தூய்மையாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி தந்து கொண்டிருந்ததைப் போலவே அங்கே உரையாடிக்கொண்டிருந்த தொண்டைமானாற்றுப் பகுதியைச் சேர்ந்த மூவரும் கூட தூய்மையாக ஒரு பக்தியான சூழலில் உரையாடிக்கொண்டிருந்தனர். இவ்வாறு தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நதி ஆலயம் பற்றியும் சந்நிதிமுருகன் திருவிளையாடல் பற்றியும் அவர்கள் தமக்கிடையே உரையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது தொண்டைமானாற்றுடன் இணைந்த கெருடாவில் கிராமத்தில் வசிப்பவரான திரு. பரமேஸ்வரன் அவர்கள் "சந்நிதியனிட்டை போய் முருகனைக் கும்பிட்டு பிறகு அந்தக் கோயில் வீதியிலையும் ஒருக்கா இருந்து வந்தால் எவ்வளவு ஆனந்தமாகவும், ஆறுதலாகவும் இருக்கும்" என தனது உணர்வை வெளிப்படுத்தினார். இந்தச் சந்தர்ப்பத்தில் தான் திரு. செகராசரட்ணம் குணநாதன் அவர்கள் உள்ளத்தை உருகவைக்கும் அந்த அற்புத நிகழ்வினை எம்மிடம் வெளிப்படுத்தினார்கள்.

**"சந்நிதி முருகன் என்றால் எனக்கு சரியான பயம்"** ஆம் இவ்வாறானதொரு சொற்பதத்துடன்தான் குணநாதன் அவர்கள் அந்த நிகழ்வு பற்றி எம்மிடம் சொல்ல ஆரம்பித்தார்கள். அதுமட்டுமல்ல ஒரு குழந்தை தனக்கு நடைபெற்ற ஒரு உணர்வு பூர்வமான சம்பவத்தை தனது தாயிடம் தயக்கத்துடனும் பயத்துடனும் வெளிப்படுத்துவது போல செ.குணநாதன் அவர்களும் தனது உணர்வுகளை அங்கே வெளிப்படுத்த ஆரம்பித்தார்கள்.

ஆம் சந்நிதியான் நிகழ்த்திய அந்த திருவிளையாடல் தொடர்பாகத் தான் பலமுறை தனக்குள் மீட்டுப்பார்த்து கண்ணீர்விட்டு தனக்குள் ஜீரணித்துக் கொண்டதேயன்றி இதுவரை அதைப் பிறரிடம் எடுத்து சொல்ல முற்பட்டதில்லை என்பதையும் வெளிப்படுத்தினார்கள். அந்த சம்பவத்தை நினைக்கும் பொழுதெல்லாம் அந்தளவுக்கு தனக்கு ஒருவித பயமும் பதட்டமும் ஏற்படுகிறதெனக் குறிப்பிட்ட குணநாதன் அவர்களின் கண்கள் அவரை அறியாமலே குளமாகியது. கனடா ஸ்ரீ செல்வச்சந்தி ஆலய வீதியில் குணநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் வெளிப்படுத்திய அந்த மெய்சிலிர்க்கவைக்கும் நிகழ்வு உண்மையில் எம்மையும் அவருடைய நிலைக்கு கொண்டு செல்வதாக அமைந்து விட்டது. மிகவும் தயக்கத்துடனும் கலக்கத்துடனும் அவர் எமக்கு விபரித்த அந்த திருவிளையாடலை இங்கே அடியார்களுக்கு வழங்குகின்றோம்.

சரியாக மூன்று தசாப்தங்களுக்கு முன்பு தனது சொந்த கிராமத்திலே உள்ள தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற குணநாதன் அவர்கள் க.பொ.த (சா.த) வகுப்புடன் தனது கல்வியை முடித்துக் கொண்டுள்ளார்கள். அதன் பின்பு தொண்டைமானாற்றில் நடுத்தெருவில் அமைந்துள்ள அவரது வீட்டிற்கு அண்மையிலிருந்த பெற்றோல் நிரப்பு நிலைய சூழல், அதனோடு இணைந்த பாலத்தடி மற்றும் ஆலயசூழல் போன்றவற்றில் ஆனந்தமாக தனது வயதை ஒத்த இளைஞர்களுடன் சேர்ந்து பொழுதுபோக்குவது அவருடய வழமையாகும். அதேநேரம் வருமானம் தரக்கூடிய ஏதாவதொரு வேலையில் சேரவேண்டும் மென்ற உணர்வும் அவருக்குள் இருக்கத்தான் செய்தது.

எமது சமுதாயத்தில் கணிசமானவர்கள் தமது வாழ்க்கைப் பாதையில் வறுமை என்ற கசப்பான அனுபவத்தை எதிர்நோக்குவது போன்று குணநாதனது குடும்பமும் வறுமை காரணமாக சமூகத்தில் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. தனது நண்பர்கள் பலர் வசதியாகவோ, ஓரளவு வசதியாகவோ வாழ்வதை அவதானிக்கின்ற குணநாதன் தனது குடும்பம் வறுமையான சூழலில் கஸ்டங்களை எதிர்நோக்குவது அவருக்கு பெரிதும் பாதிப்பாய் அமைந்திருந்தது. ஆம் இப்பூவுலகில் வறுமையாக வாழ்வது கொடியது இளமையில் வறுமையாக வாழ்தல் அதனிலும் கொடியது என ஔவைப்பாட்டியர் கூறியது போன்று குணநாதன் நிஜவாழ்க்கையில் இளமையில் வறுமையால் வரக்கூடிய அந்த கஸ்டங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான ஒரு காலகட்டத்தில்தான் குணநாதன் ஒரு நாள் சந்நிதியானை வழிபடுவதற்காக ஆலயத்திற்குச் சென்றார். அப்பொழுது ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனுடைய வருடாந்த உற்சவம் ஆரம்பமாக இருக்கின்ற காலகட்டம். மாலைப்பொழுதான அந்த ரம்மியமான சூழலில் குணநாதன் சந்நிதியானை உள்ளம் உருகி வழிபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு உள்ளம் உருகி வழிபட்டுக்கொண்டிருக்கும் நிலையில் அவரை அறியாமலே எங்கிருந்தோ ஒரு உணர்ச்சி அவருக்குள் ஊற்றெடுக்க ஆரம்பிக்கின்றது. முருகா! உன்னை வழிபடுகின்ற அடியவர்களது துன்பங்களை எல்லாம் நீக்கி அவர்களுக்கெல்லாம் நீ அபயமளிக்கிறாய் அதேபோல எமக்குள்ள பெரிய துன்பமான எமது குடும்பத்தின் வறுமையையும் நீதான் போக்கவேண்டும். இதற்கு எமது வறுமையைப் போக்கக்கூடிய நல்ல ஒரு வேலையை நீதான் எனக்கு பெற்றுத்தர வேண்டுமென ஒரு சராசரி மனிதன் வேண்டுதல் செய்வதை போன்று சந்நிதியானிடம் வேண்டுதல் செய்தார்.


குணநாதனின் அந்த சராசரி வழிபாடு அத்துடன் நின்று விடவில்லை. அது படிப்படையாக ஆழமான ஒரு பக்திநிலைக்கு அவரை வழிப்படுத்திச் செல்வதாக மாற்றமடைந்து சென்றது. இவ்வாறு ஆழமான பக்தி நிலைக்குச் சென்ற குணநாதனின் உள்ளத்தில் ஒரு வைராக்கியம் ஏற்பட ஆரம்பித்தது. ஒரு நண்பனுடன் உரையாடுவது போன்று உரையாடி இறுதியில் அந்த நண்பனுடன் சபதம் செய்வதுபோல குணநாதனும் சந்நிதி வாசலில் நின்று வழிபாடு செய்து இறுதியில் அவனிடமே விபரீதமான அந்த சபதத்தை மோற்கொண்டார்கள்.

**“அடுத்தவருட உற்சவத்திற்கு முன்பு எமது வறுமையைப் போக்கக்கூடிய நல்ல ஒரு வேலை வாய்ப்பை எனக்கு முருகா நீதான் பெற்றுத்தரவேண்டும் இல்லை என்றால், இந்த ஆலயவாசலுக்கே நான் வரமாட்டேன்.”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் சிற்றறிவு படைத்த மனிதர்களாகிய நாம் ஆலயவாசலில் நின்று இது போன்ற சபதங்களை மேற்கொள்வதென்பது கற்பனை கூட செய்துபார்க்க முடியாத விடயம். இறைவனது பாதக்கமலங்களைப் சிக்கனப்பற்றி, இரந்து மன்றாடவேண்டிய மனிதன் இவ்வாறு செயற்படுவது எற்றுக்கெள்ளக் கூடியதல்ல. ஆனாலும் குணநாதன் அவர்கள் மனதில் எந்தவிதமான கள்ளம் கபடமுமின்றி சந்நிதியான் ஆலயவாசலில் இவ்வாறான ஒரு சபதத்தை முன்யோசனை இன்றியும் அவரை அறியாமலும் பக்திமேலீட்டினால் நிஜமாகவே செய்துவிட்ட நிகழ்வு அங்கே நடந்தேறி விட்டது.



மூன்று தசாப்தங்கங்களுக்கு முன்பு குணநாதன் தரிசித்த சந்நிதியானின் பழைய முகப்புத் தோற்றம்

குணநாதன் இவ்வாறான ஒரு சபதத்தை செய்து மாதங்கள் பல ஓடிவிட்டன. பெண் சகோதரங்களையும் உள்ளடக்கிய அவரது அந்தபெரிய குடும்பத்தில் வறுமை தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. குணநாதனுக்கும் எந்தவித வேலைவாய்ப்பும் கிடைக்கவில்லை. இக்காலத்தில் வொளிநாட்டு வேலை வாய்ப்புக்காக அதிகளவு இளைஞர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடு சென்று கொண்டிருந்த காலகட்டமாகையால் குணநாதன் அவ்வாறான முயற்சிகளிலும் ஈடுபடத்தவறவில்லை. தொண்டைமானாற்றைச் சேர்ந்த இவரது நண்பர் ஐ. பாலேந்திரா கப்பலில் வேலைசெய்துவிட்டு லீவுக்காக இங்கே வந்திருந்தார். அந்த நண்பனை குணநாதன் சந்தித்து தனக்கும் கப்பலில் வேலை செய்வதற்கு உதவுமாறு கேட்டுக்கொண்டார்கள். அத்துடன் தான் எடுத்து வைத்திருந்த கடவுச் சீட்டுப்புத்தகத்தையும் (PassPort) அவருக்கு காண்பித்து தேவைப்பட்டால் பயன்படுத்துவதற்காக அதனுடய இலக்கத்தையும் அவரிடம் ஒரு துண்டில் குறித்துக்கொடுத்தார்.

இதே போன்று தொண்டைமானாற்றுக் கிராமத்தில் வசதி வாய்ப்புள்ள வர்த்தகக் குடும்பமான வீரகத்திப்பிள்ளை குடும்பத்தின் வழிவந்த திரு. இ. வடிவேற்கரசன், அவரது சகோதரர் தொண்டைமான் ஆகியோரிடமும் தொடர்பு கொண்டு அவர்களிடமும் தனக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் ஏதாவது பெற்றுத்தருமாறு கேட்டுக் கொண்டார்கள். இவ்வாறு பலமுயற்சிகளை குணநாதன் எடுத்தநிலையிலும் காலம் கடந்து கொண்டுபோனதே தவிர இவரது வறுமையை போக்கக்கூடிய நல்ல வேலைவாய்ப்பு எதுவும் கிடைக்கவில்லை. காலம் வேகமாக ஓடிச்சென்று கொண்டிருந்தது. அடுத்தவருட உற்சவத்திற்கு இன்னும் ஒரு சிலமாதங்களே எஞ்சியிருந்தன. அவருடைய உள்ளத்தில பதட்டம் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

குணநாதனனுடைய உள்ளம் கடைசி நேரத்திலாவது தனக்கு ஏதாவது வேலைவாய்ப்பு கிடைக்காதா என ஏங்கிக்கொண்டிருந்தது. ஆனால் அவருக்கு அதில் ஏமாற்றம்தான் மிஞ்சியது. நாட்கள் வேகமாக ஓடிக்கொண்டிருந்தன. அது மட்டுமல்ல சந்நிதியானது வருடாந்த உற்சவம் ஆரம்பிப்பதற்கு இன்னும் இரண்டு நாட்கள் மட்டுமே உள்ளன. அதேநேரம் ஆலயத்திலும் ஆலயச்சூழலிலும் உற்சவத்திற்கான முன் ஆயத்தங்களும் நடைபெற்றுக்கொண்டிருந்தன. வீடுகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வீடுவாசல்களை கழுவி துப்பரவு செய்யும் செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். ஆனால் குணநாதனுக்கோ எந்தவிதமான நல்லவிடயங்களும் நடைபெறவில்லை. இதனால் அவருடைய உள்ளம் வேதனயால் துடித்துக்கொண்டிருந்தது.

ஆம் ஒரு சராசரி மனிதன் ஆலயவாசலில் மேற்கொள்ளுகின்ற இதுபோன்ற சபதத்திற்கு பரம்பொருளான ஆண்டவன் செவிசாய்க்கமுடியுமா? கலியுகக் கந்தன் சந்நிதியான் இதற்கு செவிமாடுத்தானா? குணநாதனுக்கு முடிவு எவ்வாறு அமைந்தது?

சந்நிதியானது வருடாந்த உற்சவத்திற்கு இன்னும் இரண்டு நாட்கள் மட்டுமே இருந்தது. குணநாதன் விரும்பிய எதுவுமே நடைபெறவில்லை. அவருடய உள்ளம் வேதனையால் துடித்துக் கொண்டிருந்தது.

இந்த நிலையில் சற்றும் எதிர்பாராதவிதமாக கொழும்பில் வடிவேற்கரசனிடமிருந்து ஒரு தகவல் கிடைத்தது. வெளிநாட்டில் றோலரில் (இழுவைபடகு) வேலை வாய்ப்பு இருக்கிறது. இது தொடர்பாக உடனடியாக கொழும்பிற்கு வருமாறு அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. குணநாதன் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்கள் உடனடியாகவே கொழும்புக்கு புறப்பட்டுச்சென்றார்கள் அங்கே சென்றபொழுது அவர் வேலைசெய்ய இருப்பது ஒரு சிறிய றோலர் எனவும் சம்பளமும் இவர் எதிற்பார்த்ததைவிட மிகக் குறைவானது என்பதையும் அறிந்தபொழுது அது அவருக்கு பெரிய ஏமாற்றத்தையே அளித்தது. அதுமட்டுமல்ல பயணத்திற்கு அறிவித்தல் வரும்வரை கொழும்பிலேயே காத்து நிற்கவேண்டும் எனவும் இவருக்கு கூறப்படுகின்றது. குணநாதனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை என்னமுடிவு எடுப்பதென்றும் தெரியாது தத்தளித்தார்கள் அதேநேரம் இங்கே சந்நிதிமுருகன் வருடாந்த உற்சவம் ஆரம்பித்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை காலமும் சந்நிதியானது உற்சவ காலத்தில் சந்நிதியானுக்கு தொண்டுகள் செய்து பக்திச் சூழலில் உற்சவகாலத்தை போக்கியது போல இவ்வருடமும் சந்நிதியானது உற்சவத்தில் பிரசன்னமாக இருக்கவேண்டுமென்று அவரது உள்ளம் துடித்துக்கொண்டிருந்தது. ஆனால் இவருக்கு வேலை வழங்குபவர்கள் இவரது ஆதங்கத்தை நிராகரித்தார்கள். ஆலய உற்சவத்தை அடுத்த வருடங்களிலும் காணலாம் ஆகையால் அழைப்புக் கிடைத்தவுடன் பயணம் புறப்படவசதியாக கொழும்பிலேயே தங்கி நிற்குமாறு வற்புறுத்தி கூறிவிட்டனர்.

குணநாதன் அவர்கள் வாழ்க்கையில் என்றும் இல்லாத ஒரு இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டார்கள். அவருக்கு கிடைக்க இருக்கும் வேலை தொடர்பாகவோ அந்தவேலையில் கிடைக்கும் குறைந்த சம்பளம் தொடர்பாகவோ ஒரு புறம் திருப்தி இல்லாமல் விட்டாலும் மறுபுறம் தனக்கு முதல் முதல் கிடைக்கும் வேலையை எந்தவகையிலும் நிராகரிக்க முடியாத நிலைபற்றியும் சிந்தித்தார்கள். அதேநேரம் வருடாவருடம் ஆவலுடன் எதிர்பார்த்து சந்நிதியானுக்கு தொண்டுகள் செய்து கொண்டாடி மகிழும் தமது குலதெய்வமான சந்நிதியானது உற்சவம் ஆரம்பித்து விட்டநிலையில் அந்த புனிதம் நிறைந்த உற்சவத்தில் பங்குபற்றாது கொழும்பில் தங்கி நிற்பதென்பது குணநாதனுக்கு இயலாத காரியமாகவே தென்பட்டது. ஆனாலும் இப்பொழுது ஏதோ ஒரு முடிவை அவர் எடுக்கவேண்டியிருந்தது. இறுதியில் சந்நிதியானது உற்சவத்திற்கு வந்து ஒரு சில நாட்களேனும் தங்கி அவனை வழிபட்டுச்செல்வோம் என்று குணநாதன் முடிவுசெய்தார்.

ஆம் அவர் முடிவுசெய்தபடி தனது சொந்த கிராமமான தொண்டைமானாற்றுக்கு வந்து சேர்ந்தார்கள். சந்நிதியானது உற்சவம் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. பக்திமயமாக புதுப்பொலிவு பெற்றுவிளங்கும் தனது கிராமத்தின் சூழலைப்பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். உள்ளத்து உவகையுடன் வீடு வந்து சேர்ந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன ஆச்சரியம் அங்கே அவரது வீட்டிலே எதிர்பாராத செய்தி ஒன்று அவருக்கு காத்திருந்தது. ஆம் ஒரு பிரபல்யமான கப்பல் கொம்பனியிலிந்து குறிப்பிட்ட நாட்டிற்கு வந்து உடனடியாகக் கப்பலில் வேலையைப் பொறுப்பேற்குமாறு தந்தி மூலம் அவரது பெயருக்கு தகவல் அனுப்பப்பட்டிருந்தது. அவருக்கு கை கால்கள் எதுவும் வேலைசெய்யவில்லை. சந்நிதியானது அளவில்லாத கருணையை நினைத்து அவரது உடலும் உள்ளமும் ஆனந்தப் பரவசமடைந்தன. அவரை அறியாமலே அவரது உதடுகள் முருக நாமங்களை உச்சரிக்கத் தொடங்கியது.

அதே நேரம் அவர் வீட்டிற்கு வந்து இறங்கியவுடன் அந்த அழைப்புத்தந்தி அவரிடம் கிடைத்த நிலையில் ஒரு பொழுது கூட அவர் வீட்டில் தங்க முடியாதநிலை ஏற்பட்டுவிட்டது. அன்றேதான் கொழும்பிற்குச்சென்று பின்பு அங்கிருந்து குறிப்பிட்ட நாட்டிற்கு விமானம்முலம் பிரயானம் செய்து அங்கே கப்பலில் வேலையை பொறுப்பெடுக்க வேண்டுமென்பதை உணர்ந்து கொண்டார்.

ஆம் அவர் வீட்டிற்கு வந்து இறங்கியவுடன் அவருக்காக காத்திருந்த அந்த அழைப்புத்தந்தி, தொடர்ந்து அவர் உடனடியாகவே மேற்கொள்ளவேண்டி இருந்த பயணம், அந்த பயணத்தில் அவர் எதிர்நோக்கிய நிகழ்வுகள் எல்லாம் நம்பமுடியாதவையாகவே நடைபெற்றுக்கொண்டிருந்தன. கதைகளில்தான் இவ்வாறு விடயங்கள் சொல்லப்படுவதுண்டு ஆனால் இவை எல்லாம் இங்கே ஒரு தொடராகவும், வேகமாகவும் நிஜமாகவும் நடந்தேறிக்கொண்டிருந்தன.

குணநாதன் கொழும்புக்கு செல்வதற்கான ஆயத்தங்கள் உடனடியாகவே செய்யப்பட்டன. அப்பொழுது பலாலியிருந்து விமானம் மூலம் கொழும்புக்கு செல்லக்கூடிய இயல்பான பிரயாணவசதிகள் இருந்ததால் விமானம் மூலம் கொழும்புக்கு செல்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன. வீட்டிலிருந்து பலாலிவிமான நிலையத்திற்கு செல்வதற்கு உடனடியாகவே கார் ஒழுங்கு செய்யப்பட்டது. உண்மையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார் வந்து விமானநிலையம் செல்வதற்கு கூட நேரம் மட்டுமட்டாகவே இருந்தது.

ஆனாலும் குணநாதன் அவர்கள் இந்த நெருக்கடியான ஒழுங்குகளுக்கு இடையேயும் சந்நிதியானிடம் சென்று அவனை ஒரு முறையேனும் வழிபட்டு விடவேண்டுமென முடிவு செய்தார்கள். அவ்வாறே ஆலயம் சென்று சந்நிதியானை மனமுருகிவழிபாடு செய்தார்கள். அங்கே தனது நெருங்கிய நண்பனும் ஆலய பூசகருமான பொ. புவனேந்திர ஐயரிடம் ஐந்து ரூபாவை வழங்கி அதற்கு சந்நிதியானுக்கு அர்ச்சனை செய்வித்து தருமாறும் கேட்டுக்கொண்டார்கள்.

அதன்பின் அர்ச்சனை நடந்து விபூதி, சந்தணம் ஆகிய பிராசாதங்கள் வரும் வரை குணநாதன் ஆலய வாசலில் நின்றவாறு சந்நிதியானை மனமமுருகி வணங்கிக் கொண்டிருந்தார்கள். இந்தச்சந்தர்ப்பத்தில் குணநாதன் அவர்களின் மூத்த சகோதரரும் கிராமசேவையாளருமான ஜெகநாதன் அவர்கள் குணநாதனைத் தேடி காரில் ஆலயத்திற்கு வந்து சேர்ந்துவிட்டார்கள்.

அங்கே விபூதி, சந்தணம் ஆகிய பிராசாதங்களுக்காக காத்து நின்ற குணநாதன் அவர்களை அவரது சகோதரன் ஜெகநாதன் அவர்கள் ஆலய வாசலில் வைத்து சந்தித்தார்கள். விமானத்துக்கு நேரமாகிவிட்டதாகக்கூறி குணநாதனை காரில் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். வீட்டில் உடைமாற்றிய கையுடன் கார் விமான நிலையத்திற்கு புறப்பட்டுசென்றது.

அதேநேரம் ஆலயத்தில் இவரது நெருங்கிய சிநேகிதன் பொ.புவனேந்திர ஐயர் அவர்கள் குணநாதனுக்காக செய்யப்பட்டு வழங்கப்பட்ட அர்ச்சனைக்குரிய விபூதி, சந்தணம் முதலியவற்றை குணநாதனிடம் வழங்குவதற்கு ஆலயம் எங்கும் தேடியும் குணநாதனை அங்கே காணமுடியவில்லை. ஆனாலும் வெளிநாட்டிற்கு புறப்பட இருக்கும் தனது நண்பனிடம் சந்நிதியானது அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசாதங்களை எப்படியும் வழங்கிவிட வேண்டுமென குணநாதனுடைய வீட்டிற்கு அவரைத் தேடிச்சென்றார். அங்கே அவர் பயணம் புறப்பட்டு சென்றுவிட்டதாக அறிந்து மிகுந்த ஏமாற்றம் அடைந்தார்கள். ஆனாலும் தனது சிநேகிதனுடைய பயணம் சிறப்பாக அமையவேண்டுமென சந்நிதியானை வேண்டிக்கொண்டார்கள். அவருடைய வீட்டிலே ஆலய பிராசாதங்களை கையளித்தார்கள்.

இதேபோல குணநாதன் அவர்கள் தனக்கு இவ்வாறான ஒரு சிறப்பான வேலையை யார் ஒழுங்கு செய்தார்கள் என்பதை உடனடியாக உணர்ந்து கொள்வது அவருக்கு சிறிது சிரமமாகவே அமைந்தது. ஆனாலும் தனது சிநேகிதன் பாலேந்திராவிடம் தனது கடவுச்சீட்டுப் புத்தகத்தின் இலக்கத்தை ஒரு வருடத்திற்கு முன்பு வழங்கியதை மீட்டுப் பார்த்தார்கள். ஆம் கடவுச்சீட்டு இலக்கம் என்ற அந்த தகவலுடன் மட்டும் சென்று தனது சிநேகிதன் இவ்வளவு காலமாகியும் தன்னை மறக்காமல் தனக்காக இவ்வளவு தூரம் செயற்பட்டு இவ்வாறான ஒரு வேலையை ஒழுங்கு செய்துள்ளார் என்பதை உணர்ந்து கொண்டார்கள். அது மட்டுமல்ல அந்த வேலை அவருடைய வீட்டையே நாடிவரும் வகையில் அந்த சிநேகிதனுடைய செயற்பாடு அமைந்திருந்தது.

இவை எல்லாவற்றிற்கும் காரணமான கலியுகக் கந்தன் சந்நிதியானின் கருணையையும் அவனின் அற்புதத்தையும் எண்ணி குணநாதன் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள். அது மட்டுமல்ல ஒரு சராசரி இளைஞனாக சந்நிதியானது வாசலில் நின்று அவனிடம் மன்றாடி வழிபட்டு இறுதியில் அவனிடமே சபதம் செய்த நிலையிலும் தனக்கு கருணை காட்டிய சந்நிதியானது அற்புதத்தையும் அதேநேரம் தற்பொழுது நிகழ்த்திக் கொண்டிருக்கும் திருவிளையாடல்களையும் எண்ணி ஆனந்த பரவசமடைந்தார்கள். அத்துடன் தனது வாழ்நாள் முழுவதும் சந்நிதியானுக்கு அடிமையாக வாழவேண்டும் எனவும் உளப்பூர்வமாக உணர்ந்து கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலாலியிலிருந்து விமானம் மூலம் கொழும்பு சென்ற குணநாதன் தொடர்ந்து சுமூகமாகத் தனது பிரயாணத்தை மேற்கொண்டார்கள். அவர் முதலில் கப்பல் கொம்பனி அமைந்துள்ள கிறீஸ் நாட்டிற்குச் சென்று அங்கே வழங்கப்பட்ட ஆவணங்களைப் பெற்று பின் கப்பல் தரித்து நின்ற அமெரிக்காவிற்கு சென்று வேலையில் சேர்ந்து கொண்டார்கள். குணநாதனுக்கு வேலை வழங்கிய கப்பல் கொம்பனி எல்லா வகையிலும் சிறந்த கொம்பனியாக இருந்தது. வேள் றேட் அன்ட் ரான்ஸ்போட் என்ற பெயர் பெற்ற கிறீஸ்நாட்டு கப்பல் கம்பனியிலேயே குணநாதனுக்கு வேலை கிடைத்திருந்தது. அவர் விடுமுறையில் வீட்டிற்கு வந்து நிற்கின்ற சந்தர்ப்பங்களில் அவருடைய விடுமுறைக்காலம் முடிவதற்கு முன்பே அடுத்த கப்பல் பயணத்திற்குரிய அழைப்புக் கடிதங்களை அந்தக் கொம்பனி அவருக்கு அனுப்பிக் கொண்டிருந்தது. இவருடைய குடும்பம் மூன்று ஆண் சகோதரங்களையும் நான்கு பெண் சகோதரங்களையும் கொண்ட பெரிய குடும்பமாகக் காணப்பட்டது. ஆனாலும் சந்நிதியானிடம் குணநாதன் வேண்டியது போலவே அவருடைய குடும்பத்தின் வறுமை நீங்கி வசதியான நிலையில் வாழக்கூடியதாக தாராளமாக அவருக்கு வருமானம் கிடைத்தது. ஆம் அவர் வேண்டியது போன்று நல்ல வேலையும் கிடைத்தது. நல்ல வருமானம் கிடைத்தது.

குணநாதன் அவர்கள் மருதர் கதிர்காமர் பரம்பரையில் வந்த பூசகரான பாலேந்திரா ஐயருடைய மகளை திருமணம் செய்து கொண்டார்கள். நாட்டுச் சூழல் காரணமாக நீண்ட காலத்திற்கு முன்பே இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து சென்று தற்பொழுது கனடாவில் மிசிசாகா என்ற இடத்தில் வசித்து வருகின்றனர். எங்கே வாழ்ந்தாலும் குணநாதனும் அவரது குடும்பமும் சந்நிதியானது அடிமையாகவே வாழ்ந்து வருகின்றனர். குல தெய்வமான சந்நிதியானை மனதில் நிறுத்தி தியானம் செய்வது குணநாதனது நித்திய செயற்பாடாகும். குணநாதன் குடும்பத்தினர் கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்துடன் ஆழமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு கொண்டுள்ளனர். குணநாதனுடைய நண்பன் பொ. புவனேந்திரஐயர் தான் இவ்வாலயத்தின் பிரதம பூசகராக தற்பொழுது செயற்பட்டுக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆம் சந்நிதியான் வாசலில் சரியாக மூன்று தசாப்தங்களுக்குமுன்பு முன் யோசனை இன்றி அவசரப்பட்டு தான் சபதம் செய்த நிலையிலும் தனது அறியாமையை மன்னித்து தன்னையும் ஒரு அடியவனாக ஏற்று கருணை செய்த அந்த நிகழ்வு குணநாதனது நெஞ்சில் இன்றும் பசுமரத்தாணிபோல மிக ஆழமாகப் பதிந்துள்ளது. அது மட்டுமல்ல அந்நிகழ்வை மீட்டுப் பார்க்கும் போதெல்லாம் குணநாதனுக்கு விபரிக்க முடியாத பயத்துடன் கூடிய ஒரு பக்தி உணர்வு ஏற்படுவதையும் நாம் காணமுடிகிறது.

வடிவேற்கரசன் எந்நேரமும் அழைப்புவரும் ஆகவே பயணத்திற்கு ஆயத்தமாக கொழும்பிலேயே தங்கி நிற்குமாறு குணநாதனுக்கு வற்புறுத்திக் கூறியிருந்தார் என்பதை நாம் ஏற்கனவே இத்தொடரில் கூறியிருந்தோம். ஆனால் சந்நிதியானது உற்சவம் ஆரம்பித்துவிட்ட நிலையில் சந்நிதியானது சந்நிதிக்கு வந்து ஒருமுறையேனும் அவனை உள்ளம் உருகி வழிபடவேண்டுமென்ற அந்த ஆழமான பக்தியினாலும், ஈடுபாட்டினாலும் எல்லை மீறிய துடிப்புடன் சந்நிதியானிடம் வந்து சேர்ந்த அடியவரான குணநாதன் அவர்களின் பக்தியின் தூய்மை இங்கே எமக்கு நன்கு விளங்குகிறதல்லவா?

அதேநேரம் தன்மீது தூய்மையான பக்தி கொண்டு தன்னிடம் வந்து தன்னை எப்படியும் வழிபட்டுவிட வேண்டுமென்று தன்னிடம் ஓடிவந்த அடியவனுக்கு ஏற்கனவே கிடைத்த வேலையிலும் பார்க்க எல்லாவகையிலும் உயர்வான ஒரு வேலையை அவரது வீட்டிற்கே நாடி வரச்செய்த சந்நிதியானது அற்புதத்தையும் நாம் நன்கு விளங்கிக் கொள்ளமுடிகிறதல்லவா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை எல்லாம் நாம் எவ்வாறு வார்த்தைகளால் விளக்க முடியும்? கண்கண்ட தெய்வமான சந்நிதியானுக்கும் அவனது அடியார்களுக்குமிடையே உள்ள இந்த தொடர்பை மானிட உறவில் நாம் கூறுவதனால் அது பாசமுள்ள தாய், சேய் உறவை விடவும் உயர்வான ஒன்று என்று கூறுவதைவிட வேறு எவ்வாறு விளக்கமுடியும்?

குணநாதனுடைய வாழ்க்கைப் பாதையில் மட்டுமா? தன்னை விசுவாசத்துடன் நம்பி வழிபடுகின்ற ஒவ்வொருவர் வாழ்க்கைப் பாதையிலும் சந்நிதியான் தாயைப் போல் இருந்து வழிப்படுத்துகின்றான் என்பது அடியார்கள் அறியாத விடயமா?

"எல்லாம் அவன் கருணை"

- ஓம் முருகா -



தற்பொழுது திரு. குணநாதன் சுகயீனம் உற்றிருக்கின்ற நிலையிலும் உற்சவத்திற்கு சமூகம் அளித்து திருநீறு பெற்றுக் கொள்ளும் காட்சி. அருகில் அவரின் துணைவியாரும் மகளும் காணப்படுகின்றனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நியான் ஏழு

படித்தவர்கள், பாமரர்கள், ஏழைகள், பணக்காரர், இளையவர், முதியவர், ஞானிகள், யோகிகள் என பலவகைப் பட்டவர்களும் ஒன்றுகூடுகின்ற ஆலயம் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம். அதுமட்டுமல்ல இவ்வாறு பல்வேறுதரத்தினரும் இவ்வாலயத்தில் ஒன்று கூடினாலும் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வழிகளில் தாங்கள் தாங்கள் விரும்பிய முறைகளில் வழிபாட்டினை செய்துவருவதையும் நாம் காணமுடியும். ஆகமவிதிகளுக்கு அப்பாற்பட்ட வகையில் செயற்பட்டு வரும் இவ்வாலயத்தில் உண்மையான பக்தி உணர்வுடன் வழிபட வருகின்ற ஒரு அடியவர் மூலமூர்த்தியான சந்நிதியானுடன் தமது பக்தி உணர்வை நேரடியாகவே பரிமாறிக்கொள்ளுகின்ற ஒரு அனுபவத்தை இங்கே பெற்றுக் கொள்கின்றார்.

படிப்பறிவோ பணவசதிகளோ இல்லாத சாதாரண பாமர மக்கள் தமக்கு எற்படுகின்ற துன்பங்களை எல்லாம் போக்குகின்ற கருணைத் தெய்வமாகவும் தமக்கு ஆபத்துக்கள் ஏற்படுகின்ற பொழுது தோற்றாத் துணையாக உதவுகின்ற ஆபத்பந்தவனாகவும் சந்நிதியானைப் போற்றி வணங்கி அவனது திருவருளைப் பெற்று வருகின்றனர். அதேநேரம் அறிவாலும் ஆற்றலாலும் அந்தஸ்தாலும் சமூகத்தில் மிகவும் உயர்நிலையில் வாழ்ந்து வருகின்றவர்களும் தமது வாழ்க்கைப் பாதையை இட்டுச் செல்லும் பரம்பொருளாக சந்நிதியானை நம்பி அவனது பாதக்கமலங்களுக்கு தம்மை அடிமையாக்கி வாழ்ந்து வருவதையும் நாம் காண்கின்றோம். இத்தொடரில் இவ்வாறு எல்லா வகையிலும் சமூகத்தில் மிகவும் உயர்நிலையில் மதிக்கப்பட்ட அம்மையார் ஒருவருடைய வாழ்க்கைப் பாதையில் சந்நிதியானுடைய பெருங்கருணை அவரை எவ்வாறு வழிப்படுத்திச் சென்றது என்ற அற்புத அனுபவத்தை இங்கே அடியார்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் நீதித்தாய்க்கு பெருமை சேர்த்த பெருமகனாகக் கருதப்படுபவர் சுப்ரிம்கோட்(Supreme Court) நீதியரசராகக் கடமையாற்றிய அமரர் பொன் ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள். இதேபோன்று இவரது இரண்டாவது மகள் திருமதி இந்திரா சிவயோகம் அவர்கள் ஈழத்தில் மட்டுமன்றி பிரித்தானியாவிலும் மிகவும் புகழ்பெற்ற கண் சத்திர சிகிச்சை நிபுணராக மதிக்கப்பட்டவர். ஈழத்தில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா தொடக்கம் ரணில் விக்கரமசிங்கா உட்பட பல பிரபல்யமான அரசியல்வாதிகளும் அவரை நாடிவந்து கண் சத்திர சிகிச்சையை மேற்கொண்டனர்.

நீதியரசர் பொன் ஸ்ரீஸ்கந்தராசா அவர்களின் சொந்த இடம் தொண்டைமானாறு. இவரின் குடும்பமே சந்நிதியானிடம் அளவில்லாத பக்தி கொண்டவர்கள். இவரின் இரண்டாவது மகளான திருமதி இந்திரா சிவயோகம் அவர்களும் தமது மூதாதையர்களைப் பின்பற்றி சிறுவயதிலிருந்தே சந்தியானுக்குத் தொண்டுகள் செய்து சந்நிதியானை மெய்யன்புடன் வழிபட்டு வந்தார்கள். கல்வி பயின்ற காலத்திலும் தொழில் புரிந்த காலத்திலும் தற்பொழுது பிரித்தானியாவில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நிலையிலும் நாளும் பொழுதும் சந்நிதியானுடயை நினைவுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்திரா அவர்கள் கொழும்பில் பிரபல்யமான பெண்கள் கல்லூரியில் (Ladies College) கல்வி கற்றுள்ளார்கள். மருத்துவக் கல்லூரி அனுமதிக்காக அப்பொழுது நடை பெறுகின்ற மருத்துவக்கல்லூரி பிரவேசப் பரீட்சைக்கு தனது 16 வயதிலேயே தோற்றி அதில் தேசியரீதியில் முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்றார். இதன்பின் மருத்துவக் கல்லூரியில் அனுமதி பெற்று அங்கே கல்வி கற்று 1958 ஆம் ஆண்டு மருத்துவக் கல்லூரியின் இறுதிப் பரீட்சையிலும் சத்திர சிகிச்சைப் பிரிவில் அதி விஷேட திறமைச்சித்தியுடன் சித்தி பெற்றுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு அதே ஆண்டில் அதாவது 1958 ஆம் ஆண்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைத்தியராகக் கடமையாற்றத் தொடங்கினார்கள். இவ்வாறு வைத்தியராக இவர் கடமையாற்றத் தொடங்கி இரண்டு வாரங்களே ஆன நிலையில் மிகவும் கொடூரமான அந்த 1958 ஆம் ஆண்டு இனக்கலவரம் மூண்டு விட்டது. அப்பொழுது இந்திரா அவர்கள் இரத்மலானையில் தனது தாய் மற்றும் சகோதரங்களுடன் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இரத்மலானை பகுதியில் தமிழர் வீடுகள் அனைத்தும் தீயிட்டு அழிக்கப்பட்டன. இதனால் அந்தப்பகுதியில் குடியிருந்த 96 தமிழர்கள் இவர்களது இல்லத்தில் தஞ்சம் புகுந்தனர். இறுதியில் இவர்களது வீட்டையும் தீக்கிரையாக்குவதற்கு காடையர்கள் வந்த பொழுதிலும் சந்நிதியான் கருணையினால் இவர்களும் இவர்கள் வீட்டில் தஞ்சம் அடைந்திருந்த 96 பேரும் காப்பாற்றப் பட்டனர். இவ்வாறு சந்நிதியானின் பெருங்கருணையினால் காப்பாற்றப்பட்ட இந்திரா அவர்களும் எல்லோரையும் போலவே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்கள்.

இங்கே யாழ்ப்பாணத்தில் யாழ். பெரியாஸ்பத்திரியில் சத்திரசிகிச்சைப் பிரிவில் தனது கடமையை இந்திரா அவர்கள் ஆற்றத் தொடங்கினார்கள். ஆம் இலங்கையில் தேசிய ரீதியில் திறமையான சித்திகளைப் பெற்று தேசியரீதியில் மதிக்கப்பட்ட சத்திரசிகிச்சை நிபுணர் திருமதி இந்திர சிவயோகம் அவர்கள், பின் சர்வதேசரீதியாகவும் மதிக்கப்படுகின்ற ஒரு கண்வைத்திய நிபுணராக உயர்வடைந்தார்கள். இவ்வாறெல்லாம் தான் படிப்படியாக உயர்வு பெற்று சிறப்பும் பெருமையும் அடைவதற்கு சந்நிதியான் எவ்வாறு தோன்றாத்துணையாக இருந்து தனக்கு திருவருள் புரிந்தான் என்பதை திருமதி இந்திரா சிவயோகம் அவர்கள் அடியேனுக்கு விரிவாக எழுதி அனுப்பியுள்ளார்கள். அவர் எழுதி அனுப்பியதன் ஒரு பகுதியை இங்கே அடியார்களுக்கு அப்படியே வழங்குகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரட்மலானையிலிருந்து புறப்படும் வேளை ஒரு சில உடுப்புகள் மட்டும் கைவசம் எடுத்து வந்தோம். மருத்துவ போதனைக்குரிய ஏதுக்கள் யாவும் அவ்விடமே இருந்தன. எனினும் இரண்டு வருடங்கள் யாழ். மருத்துவமனையில் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். அப்பொழுது Royal College Surgeons of England என்ற அமைப்பினால் Primary FRCS Examination வருடம் தோறும் இலங்கையின் தலைநகரான கொழும்பில் நடாத்தப்பட்டு வந்தது. இதில் தென் கிழக்கு ஆசியாவாகிய சிங்கப்பூர், மலேசியா, இந்தியா, பாகிஸ்தான், தாய்லாந்து, இலங்கை ஆகிய தேசங்களின் வைத்தியர்கள் நேரில் பங்குபற்ற சந்தர்ப்பங் கொடுக்கப்பட்டு வந்தது. யானும் அப்பரீட்சையில் பங்கு பற்ற விரும்பி, Application அனுப்பினேன். பங்குபற்றும் சகலரும் நெடுங்காலம் பரீட்சைக்குரிய ஆயத்தங்கள் யாவும் புத்தகங்கள் மூலமும் போதனைகள் மூலமும் பெற்றிருப்பதற்கு ஐயமில்லை. இவற்றை யான் பெறுவதற்கு கொழும்பு செல்லவேண்டியிருந்தும் யாழ் மருத்துவமனை அதிகாரி Leave தரவில்லை.

பரீட்சைக் காலத்துக்கு மட்டும் Leave கிடைத்து செல்வச்சந்நிதி அப்பனை ஆலயத்தில் சென்று மனமாரத் தரிசித்து 1960 January மாதம் கொழும்பு புறப்பட்டேன். அவ்வேளை என் அன்புச் சகோதரி சுசீலாவும் துணைவரும் கொழும்பில் வசித்த காரணத்தால் தங்க வசதியும் எம்பெருமான் தந்திருந்தார். பரீட்சைக்கு ஏறத்தாள 200 மருத்துவர்கள் பங்குபற்றினர். பரீட்சை நடாத்துவதற்கு London Teaching Hospitalsல் பணிபுரியும் மூன்று Famous Professors சமூகமளித்திருந்தனர். சந்நிதி அப்பனுடைய திருவடிகளை வருடியபடியே பரீட்சைத்தாள்களை எழுதியும், நேர்முகப் பரீட்சையிலும் பங்கு பற்றினேன். பலரும் தாங்கள் திறம்பெறச் செய்ததெனத் தெரிவிப்பதையும் செவியுற்றும் சற்று மனக் கலக்கத்துடன் வீடு சென்றேன்.

என்ன அதிசயம், பேரற்புதம், எம் பெருமான் இத்தொகை மருத்துவருக்குள் அடியேனுக்கு முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தானம் அளித்து Royal College of Surgeons எனக்கு Hallet Prize என்ற பெரும் மதிப்பிற்குரிய பரிசும் வழங்கினர். அத்துடன் அடியேனுடைய பரீட்சைத்தாள்களை Royal College of Surgeons of England Museum இல் பல வருடகாலம் பார்வைக்கு வைத்தனர். இத்தகுதி பெற்ற காரணத்தால் உலகத்தில் முதல் ஸ்தானம் வகிக்கும் கண் மருத்துவ நிலையமாகிய Moorfields Eye Hospital Londonஇல் வழக்கமாக Oxford Cambridge Universities quality பண்ணிய வெள்ளைக்காறருக்கு மட்டும் வழங்கப்படும் Senior Register எனும் ஸ்தானத்தை வளங்கப்பெற்ற முதல் ஆசியப் பிரஜை என்ற பெருமையைப் பெற்றுக் கொண்டேன். அத்துடன் 2 வருட காலத்திற்குள் R.R.CS Final இலும் சித்தியடைந்தேன். அவ்வேளை முருகப்பெருமான் திருவருள் முன் நிற்க என் அன்புப் பெற்றோர் Supreme Court நீதியரசர் பொன் ஸ்ரீஸ்காந்தராஜா தம்பதிகள் அரசாங்க விடுதலையில் இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்தார்கள். இவை எல்லாம் எம்பெருமானுடைய பரம்கருணை என்றே உணர்ந்து கொண்டேன்.

யான் இலங்கை திரும்பி கொழும்பு கண் வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சை நிபுணராகப் பதவி ஏற்றேன். அல்லலுற்ற சமுதாய நோயளிகளுக்கு இலவச கண் சத்திர சிகிச்சை செய்யும் வாய்ப்பைத் தந்த பெருமான் அதேவேளை இலங்கையின் அக்கால ஜனாதிபதி J.R. Jayawardene தம்பதிகள் Felix Dias Bandaranaike தம்பதிகள், Chandrika Bandaranaike, Ranil Wickemasinge குடும்பத்தவர்களும் என் வைத்திய நிபுணத்துவத்தை நாடினர். யாவும் கந்தவேளுடைய திருவிளையாடலே.

ஆம் திருமதி இந்திரா சிவயோகம் மட்டுமல்ல இவரைப்போல சமுதாயத்தில் வெவ்வேறு நிலைகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஆயிரக்கணக்கான அடியவர்கள் தத்தமது வாழ்க்கைப் பாதை சீராகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மையாகவும் அமைவதற்கு கலியுகக் கடவுளான ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனே வழிகாட்டி வருகின்றான் என்ற அசையாத நம்பிக்கையுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வாறான அந்த நம்பிக்கை எவ்வளவு நிதர்சனமான உண்மை என்பது அவர்களுக்கே அது வெளிச்சமானதாகும்.

ஓம் முருகா



லண்டன் முத்துமாரி அம்மன் கோவிலில் சந்நிதியானின் புதிய மாமணி அமைப்பு ஆரம்ப நிகழ்வில் தலைமை வகித்த வைத்தியக் கலாநிதி திருமதி இந்திரா சிவயோகம் அவர்கள்.



ஆறாம் நாள் மாலை உற்சவம்.
கதிர்காமத்தில் கன்னிப்பெண்கள் விளக்கு எடுப்பது போல இங்கே சிறுமிகள் விளக்கெடுக்கும் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் எட்டு

ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் அடியார்களுக்கு அருளை அள்ளி வழங்குகின்ற அற்புதக் கந்தன். அது மட்டுமல்ல ஒரு அடியவர் தமது நேர்த்தியை விரும்பிய நாளில் விரும்பிய பூசையில் நிறைவு செய்யக்கூடிய வகையான வசதிகளும் இவ்வாலயத்தில் காணப்படுகின்றன. எமக்குத் தெரிந்த வரையில் ஒரு அடியவர் இவ்வளவு எளிதாக தனது நேர்த்தியை நிறைவு செய்து அதேநேரம் முழுமையான திருவருளை பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரு ஆலயத்தை வேறு எங்குமே நாம் காணமுடியாது.

இவ்வாறு தன்னை நாடிவருகின்ற அடியவர்களை உய்விப்பதற்காகவே ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் இவ்வாலயத்தில் குடிகொண்டிருக்கின்றான். அதேபோல ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திலோ அல்லது ஆலயச்சூழலிலோ ஆணவத்துடனும் அகங்காரத்துடனும் செயற்படுகின்றவர்கள் மற்றும் தன்னை நாடிவருகின்ற அடியவர்களுக்கு வேண்டுமென்றே தீங்கு இழைக்கின்றவர்களுக்கெல்லாம் நாங்கள் கற்பனை கூட செய்து பார்க்கமுடியாத தண்டனைகளை வழங்குகின்ற காக்கும் தெய்வமாகவும் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் விளங்குகின்றான்.

இதனை வெளிப்படுத்துகின்ற சம்பவமொன்றை இங்கே அடியார்களுக்கு வழங்குகின்றோம். இச்சம்பவம் அரை நூற்றாண்டு களுக்கு முன்பு ஆலயத்தில் இடம்பெற்ற ஒரு சம்பவம் என்றாலும் ஆலயப்பூசகர்கள் மற்றும் மூத்த அடியர்கள் பலராலும் இன்றும் பயபக்தியுடன் பேசப்படுகின்ற ஒரு சம்பவமாகும். அதே நேரம் நிகழ்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அடியவர்களாகிய நாமும் நிச்சயம் தெரிந்திருக்க வேண்டிய ஒரு முக்கிய நிகழ்வாகவும் காணப்படுகின்றது.

பெயர் செல்வராசா. சொந்த இடம் தொண்டைமானாறு. இவர் இராணுவத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்ற ஒரு இராணுவ வீரர். முதலாம் உலகமகா யுத்தத்தில் துணிச்சலாகவும் அதே நேரம் பெறுமதியான சாதனைகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்ததனாலும் செல்வராசா இராணுவத்தால் நன்கு மதிக்கப்பட்ட ஒரு செயல்வீரனாக விளங்கினார். இவர் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற நிலையிலும், இராணுவத்தில் செய்த சாதனைகளை மதித்து இவர் அரச திணைக்களங்களுக்கு செல்லும் பொழுது அங்கே இவருக்கு விசேட மதிப்பு வழங்கப்படுவதற்கான சான்றிதழும் அவருக்கு வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் இராணுவத்தால் 'வின் கொம்" என்ற பதக்கமும் இவருக்கு வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறான சிறப்பும் பெருமையும் நிறைந்த செல்வராசாவுக்கு தொண்டைமானாற்று கிராமத்து மக்களும் மிகுந்த மதிப்பும் மரியாதையும் வழங்கினார்கள். இராணுவத்தில் சாதனை புரிந்த அந்த செயல்வீரன் தமது கிராமத்தில் வாழ்வதையிட்டு இக்கிராமத்து மக்கள் தமக்குள் பெருமைப்பட்டும் கொண்டனர்.

இவ்வாறு செல்வராசா மக்கள் மதிக்கின்ற ஒரு நிறைவான வாழ்வை இக்கிராமத்தில் இருந்து வாழ்ந்து கொண்டிருந்தாலும் காலப்போக்கில் மது என்ற அரக்கனுக்கு அடிமையாகி அநியாயங்களையும் அக்கிரமங்களையும் செய்து மற்றவர் மனதை புண்படுத்தும் ஒருவராக மாற ஆரம்பித்துவிட்டார். மதுவுக்கு அடிமையாகிய செல்வராசா நாட்டிலும் வீட்டிலும் அநியாயங்களைச் செய்ய ஆரம்பித்தார். ஆலயச் செயற்பாடுகளுக்கும் அடியார்களுக்கும் கூட இவர் அநியாயங்களைச் செய்து வந்தார். ஒரு முறை சந்நிதியான் பொங்கலுக்கு உப்புத்தண்ணீர் தீர்த்தம் எடுப்பதற்காக செல்லும் பாதையிலுள்ள வீட்டு முற்றங்களையும், வீதிகளையும் பெண்கள் கூட்டி தண்ணீர் தெளித்து புனிதம் பேணிக்கொண்டிருந்தனர். அப்பொழுது செல்வராசா அவற்றையெல்லாம் குழப்பி அநியாயங்கள் அக்கிரமங்களை புரியலானார். இந்நிலையில் மிகவும் மனவேதனை அடைந்த அந்தப் பெண்கள் எதுவுமே செய்யமுடியாது மனதால் அவரைத் தூற்றியுள்ளனர். இதே போன்று வீட்டில் தனது மனைவியை அடித்து கொடுமைகளை செய்யும் செயற்பாட்டிலும் ஈடுபடலானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் எல்லாவகையான மக்களும் ஒன்றுகூடுகின்ற ஒரு புனிதமான தலம். இங்கே அந்தணர் சமூகத்தவர்களும் வந்து பயபக்தியுடன் வழிபாடு செய்து சந்நிதியானின் திருவருளைப் பெற்று வருகின்றனர். தூர இடங்களில் இருந்து வந்து வழிபாடு செய்யும் அந்தணர்கள் இங்கே வந்து தங்கி வழிபாடு செய்வதற்கும் அன்னதானம் வழங்குவதற்கும் சரஸ்வதி ஆலய மடப்பள்ளியில் அக்காலத்தில் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தது. இவர்களில் ஒரு அந்தணர் குடும்பம் சந்நிதியானின் திருவருளில் அசையாத நம்பிக்கை வைத்து வழிபாடு செய்து வந்ததுடன் வருடந்தோறும் சந்நிதியானுக்கு நேர்த்தி வைத்து அதனை நிறைவு செய்து வருகின்ற செயற்பாட்டிலும் அக்காலத்தில் தவறாது ஈடுபட்டு வந்தனர்.

இந்த அந்தணர் குடும்பம் தமது நேர்த்தியை வள்ளியம்மன் வாசலில் அன்றும் வழமைபோல நிறைவேற்றிக் கொண்டிருந்தனர். ஆம் வள்ளியம்மன் வாசலில் அந்த அந்தணர் குடும்ப அங்கத்தவர்கள் ஒன்று சேர்ந்து மாவிளக்கு ஏற்றுகின்ற அந்த செயற்பாட்டில் மிகுந்த பக்தியுணர்வுடன் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இந்த சந்தர்ப்பத்தில் தான் யாரும் எதிர்பார்க்காத அந்த அவலம் ஆலயத்தில் இடம்பெற்றது.

செல்வராசா இரண்டாம் தாரமாக நாகம்மா என்ற பெண்ணை திருமணம் செய்திருந்தார். இவர்கள் தொண்டைமானாற்றில் வரலாற்று சிறப்புமிக்க ராக்கா பனையடி என்ற இடத்திலுள்ள நாகம்மாவின் சீதன வீட்டில் வாழ்ந்து கொண்டிருந்தனர். இந்த வீடு ஆலயத்திற்கு சிறிது தூரத்தில் வடக்குத் திசையில் உள்ள புளியடியில் அமைந்திருந்தது. அன்றைய தினம் அவர் தனது மனைவியை மிகவும் மோசமாக அடித்து துன்புறுத்திக் கொண்டிருந்தார். செல்வராசாவின் இத்தகைய சித்திரவதையினால் வேதனை தாங்கமுடியாத அவரது மனைவி நாகம்மா, ஆலயத்தின் வடக்குத் திசையாக அமைந்திருந்த தனது வீட்டிலிருந்து வெளியேறி தனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைக்கலம் தேடி ஆலயம் அமைந்திருந்த திசையில் வீதி வழியாக ஓடிவந்து கொண்டிருந்தார்கள். அதேநேரம் அந்த அம்மையாரை துரத்திக் கொண்டுவந்த அவரது கணவர் செல்வராசா மனைவியைப் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தார். தனது கணவன் தன்னைப் பின் தொடர்ந்து வருவதை அவதானித்த செல்வராசாவின் மனைவி என்ன செய்வதென்று தெரியாது குழப்பமடைந்தார்கள். இறுதியில் தன்னை காப்பாற்றும் நோக்குடன் ஆட்கள் நடமாட்டம் காணப்பட்ட வள்ளியம்மன் ஆலய வாசலுக்கு ஓடிவந்து அங்கே அடியார்கள் மத்தியில் ஒருவராக மறைந்து கொண்டார்கள். தனது மனைவியை எப்படியாவது பிடித்து விடவேண்டுமென்ற ஒரே வேட்கையிலேயே செல்வராசா அப்பொழுது செயற்பட்டுக் கொண்டிருந்தார். இதனால் மதுபோதையில் இருந்த செல்வராசா அது ஆலயம் என்பதையும் மதிக்காது வள்ளியம்மன் வாசலுக்கே வந்துவிட்டார்.

இந்த சந்தர்ப்பத்தில்தான் சந்நிதியான் ஆலயத்தின் வள்ளியம்மன் வாசலில் யாரும் கற்பனை கூட செய்து பார்க்க முடியாத அந்த அவலம் நடந்தேறியது. ஆம் அங்கே மிகுந்த பயபக்தியுடன் வழமைபோல மாவிளக்கு ஏற்றுகின்ற செயற்பாட்டில் அந்த அந்தணர் குடும்பத்தினர் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். இந்த சூழ்நிலையில் வள்ளியம்மன் வாசலுக்கு வந்து சேர்ந்த செல்வராசா அங்கே கெட்டவார்த்தைகளால் மனைவியை ஏசிக் கொண்டிருந்தார்கள். அது மட்டுமல்ல அடியார்களுக்குள் தஞ்சம் அடைந்திருந்த தனது மனைவியை பிடிப்பதற்காக அந்த அடியார் கூட்டத்திகுள்ளேயே செல்வராசா புகுந்துவிட்டார். இதனால் வள்ளியம்மன் வாசல் ஒரே அமர்க்களமாகியது. குடும்பசகிதம் நேர்த்தியை நிறைவு செய்வதில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அந்த அந்தணர் பெருமகன் நடைபெற்றுக் கொண்டிருந்த சம்பவங்களைப் பார்த்து குழப்பமடைந்தார்கள். அது மட்டுமல்ல செல்வராசாவிடம் தமது மாவிளக்கு ஏற்றுகின்ற செயற்பாட்டிற்கு எந்தவித குந்தகமும் ஏற்படுத்த வேண்டாமென பக்குவமாகக் கூறிக்கொண்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் செல்வராசா அவற்றையெல்லாம் சிறிதும் கருத்தில் எடுக்கவில்லை மாறாக அந்த அடியார்கள் கூட்டத்திலிருந்த தனது மனைவியை பிடித்து இழுக்கும் முயற்சியில் மூர்க்கத்தனமாக ஈடுபடலானார். இதனால் அங்கே நடக்கக்கூடாத நிகழ்வு நடந்தேறியது. ஆம் அங்கே மாவிளக்குகள் எல்லாம் சிதறிக்கப்பட்டு வள்ளியம்மன் வாசற் பகுதியே அல்லோல கல்லோலப்பட்டது.

மாவிளக்கு ஏற்றும் செயற்பாட்டை தொடர்ந்து செயற்படுத்த முடியாத அளவிற்கு மாவிளக்குகள் எல்லாம் சிதறுண்டு அலங்கோலமாகி விட்டன. யாருக்கும் எங்கேயும் நடக்காத நடக்கக் கூடாத அவலம் சந்நிதியில் நடந்தேறி விட்டது. இந்த நிலையில் சந்நிதியானை நாடிவந்த அந்த அந்தணர் குடும்பத்தினர் தமக்கு ஏற்பட்ட அந்த துன்பியல் நிகழ்வால் செய்வதறியாது திகைப்படைந்து சோகமே உருவமாகக் காணப்பட்டனர். இறுதியில் இங்கே இவ்வளவும் நடந்தேறி விட்டநிலையில் இந்நிகழ்வை நாம் எவ்வாறு தாங்கிக் கொள்வதென தமது உணர்வுகளை வெளிப்படுத்திய அந்த அந்தணர் குடும்பத்தினர் இறுதியில் அங்கிருந்து தமது நேர்த்தியை நிறைவு செய்யமுடியாத கவலையுடனும் குழப்பத்துடனும் வீட்டிற்குத் திரும்பிச் சென்றனர்.

ஆனால் ஆலய வாசலில் இவ்வளவு அவலம் நடந்தேறுவதற்கு காரணமாக இருந்த செல்வராசா இச்சம்பவத்திற்காக வருந்தியதாகவோ அல்லது திருந்தியதாகவோ தென்படவில்லை. திடகாத்திரமாகவும் வாட்டசாட்டமாகவும் தென்பட்ட செல்வராசாவை பயத்தினால் யாரும் எதிர்க்கவும் முடியாது திருத்தவும் முடியாது மனதுக்குள் புழுங்கிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் சந்நிதியான் கலியுகக் கந்தனல்லவா? தன்னை நாடி வந்து உண்மையான பக்தியுடன் மாவிளக்கு ஏற்றி தனது நேர்த்தியை நிறைவு செய்துகொண்டிருந்த அந்த அந்தணர் குடும்பத்திற்கு ஆணவத்துடனும் அகம்பாவத்துடனும் நடாத்தப்பட்ட அந்த துன்பியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வை பொறுத்துக்கொள்வானா? ஆம் காலம் காலமாக சந்நிதியில் அநியாயம் அக்கிரமம் செய்கின்ற ஆணவம் படைத்தவர்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் என்ன தண்டனை கிடைக்கும் என மக்கள் தெரிந்து வைததிருக்கின்றார்களோ அதேபோன்ற தண்டணைக்குரிய நிகழ்வு இங்கேயும் செல்வராசாவிற்கு நடந்தேறியது.

இக்காலகட்டத்தில் சந்நிதியில் பாபர் தொழில் செய்வதற்காக இடைக்காடு அம்மன் கோவிலடியைச் சேர்ந்த தம்பன் என்ற பெயருடைய பாபர் ஒருவர் சந்நிதிக்கு முக்கிய நாட்களிலும், உற்சவம் போன்ற காலங்களிலும் தனது தொழிலின் நிமித்தம் வந்து செல்வது வழக்கம். இவருக்கு ஒரு கையில் முழங்கைக்குக் கீழ் மணிக்கட்டுடன் சேர்ந்த பகுதிகள் இல்லாமையால் இவரை கூழங்கை பாபர் எனவும் மக்கள் அழைப்பதுண்டு. அத்துடன் ஒற்றைமாடு கட்டிய திருக்கை வண்டிலில் தான் இவர் தினமும் ஆலயத்திற்கு வந்து செல்வது வழக்கம். இந்த திருக்கை வண்டிலில் பொருட்களை ஏற்றி இறக்குகின்ற தொழிலையம் இவர் இடைக்காட்டு கிராமத்து மக்களுக்கு செய்து வந்ததையும் அறியமுடிகிறது.

இடைக்காட்டைச் சேர்ந்த இந்த முடிவெட்டும் தொழில் செய்கின்ற இந்த அன்பர் அன்று வழமைபோல காலையில் திருக்கை வண்டிலில் ஆலயத்திற்கு வந்து ஆலயத்தின் தெற்குப் புறமாக உள்ள புளியடியில் தனது தொழிலை முடித்த பின்பு மாலையில் தனது திருக்கை வண்டிலில் ஆலயத்தில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். வழமைபோல அவரது திருக்கை வண்டில் ஆற்றுக்கு அருகே உள்ள வீதியால் சென்று ஆற்றைக் கடப்பதற்காக அப்பொழுதிருந்த பழைய பாலத்தை அண்மித்துக் கொண்டிருந்தது. அப்பொழுது அங்கே குடிபோதையில் ஆணவத்துடன் நடமாடிக் கொண்டிருந்த செ்லவராசாவின் கவனம் அங்கே வந்துகொண்டிருந்த அந்த திருக்கை வண்டிலின் மீது திரும்பியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வராசா அந்த திருக்கை வண்டிலைப் பிடித்து அதனை ஓடவிடாது தடுத்து நிறுத்தினார். அப்பொழுது அந்த கூழங்கை வாபர் செல்வராசாவிடம் மிகவும் பணிவுடனும் மன்றாட்டமாகவும் தன்னை வீடு செல்ல அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டார். செல்வராசாவும் அதற்கு செவிமடுத்து அந்த வண்டியை நகரவிட்டார். ஆனால் சிறிது தூரம் வண்டில் சென்றபின்பு மீண்டும் வண்டியை தடுத்து அதனை நகரவிடாது மறித்துவிட்டார். இப்பொழுது மீண்டும் அந்த பாபர் செல்வராசாவிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டதற்கிணங்க செல்வராசா வண்டிலை நகரவிட்டார். ஆனாலும் மீண்டும் செல்வராசா அந்த திருக்கை வண்டிலை நகரவிடாது தடுத்து நிறுத்தினார்கள். ஆம் ஒரு வகையில் ஆணவம் போலவும் ஒரு வகையில் விளையாட்டுப் போலவும் வண்டிலைத் தடுத்து நிறுத்துவதும் பின் மீண்டும் நகரவிடுவதுமான செல்வராசாவின் இதுபோன்ற செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டே இருந்தது. அதேநேரம் இவ்வாறு சிறிது சிறிதாக வண்டில் பாலத்தை தாண்டி ஆற்றுக்கு அப்பால் அக்கரைக்கு வந்துவிட்டது. ஆனாலும் இடைக்காட்டைச் சேர்ந்த அந்த பாபர் தமது குலத்தொழிலுக்குரிய பணிவுடனும் பண்புடனும் செல்வராசாவினுடைய இத்தகைய சின்னத்தனமான செயலை பொறுமையுடன் பொறுத்து செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இப்பொழுது மம்மல் பட்டுக்கொண்டிருந்தது. திருக்கை வண்டில் ஆற்றைக் கடந்து ஆற்றுக்கு அப்பால் சரியாக ஆலயத்திற்கு நேராக வந்துவிட்டது. ஆனாலும் செல்வராசா குடிபோதையாலும் தனது அகங்காரத்தாலும் இப்பொழுதும் தனது சின்னத்தனமான அந்த செயலை தொடர்ந்து செய்துகொண்டே இருந்தார். நேரம் மம்மலாகி விட்டதால் அந்த பாபர் செல்வராசாவிடம் சற்று உயர்ந்த குரலில் **“என்னையா பொழுதும் படுகிறது நான் வீட்டிற்கு போவதில்லையா”** என சுட்டிக் காட்ட முற்பட்டார்கள்.

இவ்வாறு பாபர் கதைத்தது தான் தாமதம் செல்வராசா அந்த பாபரை அவரது குலத்தொழிலைச் சொல்லி கடுமையாக பேசியவாறு வண்டிலின் பின்பக்கத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாபரை தாக்குவதற்காக வண்டிலின் முன்பக்கமாக தள்ளாடிய படி நடந்துவர முற்பட்டார்கள்.

தாமதித்தால் தனக்கு நேர இருக்கும் ஆபத்தை உணர்ந்துகொண்ட அந்த குழங்கை பாபர் தனது குலத்தொழில் செய்யும் அந்த கத்தியை எடுத்து அந்த ஒரு கையினால் தன்னை நோக்கிவந்து கொண்டிருந்த செல்வராசாவின் வயிற்றுப்பக்கமாக மிகவும் ஆழமாவும் நீளமாகவும் தனது முழுப்பலத்தையும் பயன்படுத்தி கீறிவிட்டார்கள். சற்றும் எதிர்பாராது நடைபெற்ற இந்த அவலத்தால் சத்தம்போட்டு அலறியவாறு தொப்பென செல்வராசா நிலத்தில் புரண்டு விழுந்தார்கள். அதுமட்டுமல்ல செல்வராசாவின் பெரும்பகுதிக் குடலும் வெளியே வந்து விட்டது. அப்பகுதியில் விலங்குகள் தண்ணீர் குடிப்பதற்கு பயன்படுகின்ற ஒரு தண்ணீர் தொட்டிக்கு அருகில் இரத்த வெள்ளத்தில் அவரது உயிரற்ற உடல் காணப்பட்டது.

ஆம் ஆற்றுக்கு அப்பால் அக்கரையில் ஆலயத்திற்கு நேராக மட்டுமல்ல சரியாக செல்வராசா அநியாயம் புரிந்த அதே வள்ளியம்மன் ஆலயத்திற்கு நேராக செல்வராசாவிற்கு இந்த அவலம் நடந்தேறியது. பாபர் மீது கொலைக்குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டாலும் முடிவில் பாபர் விடுதலை ஆனார். அதுமட்டுமல்ல அவர் வழமைபோல அதன்பின்பும் ஆலயத்திற்கு வந்து தனது தொழிலைச் செய்து வந்தார். இந்த நிகழ்வின் பின் அந்தணர் குடும்பத்தினரும் வழமைபோல ஆலயத்திற்கு வந்து தமது நேர்த்திக்கடனைச் செய்ய ஆரம்பித்தனர். அத்துடன் அநியாயங்கள் செய்த ஒரு சண்டியனை இல்லாமல் செய்தவர் என்ற ஒரு மதிப்பும் அந்த கூழங்கை பாபருக்கு பரவலாக மக்கள் மத்தியில் இருந்துள்ளதை அறிய முடிகிறது.


ஆம் கருணைத் தெய்வமாக மட்டுமல்ல காக்கும் தெய்வமாகவும் விளங்கும் சந்நிதியானுடைய ஆலயத்தில் இதுபோன்ற சம்பவங்கள் அன்றுமட்டுமல்ல இன்றும்




289486
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தேறிக் கொண்டுதான் இருக்கின்றன. இவற்றை எல்லாம் நாம் இன்றும் நேரடியாகவே பார்த்து உணரக்கூடியதாகவும் உள்ளது.

- ஓம் முருகா -



அக்கரையிலிருந்து வள்ளி அம்மன் வாசலை எதிர்நோக்கும் சந்நிதி ஆலயத்தின் மேற்குப்பக்க அழகிய தோற்றம்



சந்நிதியான் மேற்கு வீதியில் ஆற்றோரமாக தேர் ஏறி வருகின்ற அற்புதக் காட்சி - 2012




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
14038 CC



சந்நிதியான் தொண்டர் குழாம் மகிழ்வுடன் தோன்றும் அழகிய காட்சி. மத்தியில் பிரதம பூசகரும் துணைவியாரும் காணப்படுகின்றனர்



சந்நிதியான் பாகம் மூன்று நூல் வெளியீடு தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய 2012 உற்சவத்தின்போது வெளியிடப்பட்டது. முதற் பிரதியை வல்வை நகரபிதா ந. அனந்தராஜ் அவர்களிடமிருந்து வர்த்தகர் இ. வடிவேற்கரசன் அவர்கள் பெற்றுக் கொள்கிறார். அருகில் நூலாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாயன்மார் காலத்தில் மட்டுமல்ல தற்பொழுதும் ஆண்டவனின் அற்புதங்கள் நடைபெற்றுக்கொண்டு தான் இருக்கின்றன. கலியுகக் கந்தன் சந்நிதி முருகனின் அற்புதங்கள் இதனை இப்பொழுதும் எமக்கு எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன. இவற்றில் மானிட அறிவுக்குட்பட்டு எம்மால் உணரக்கூடிய ஒரு சில துளிகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்த நிஜங்களை நீங்கள் வாசிப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பம் கூட ஒருவகையில் உங்களுக்குக் கிடைத்த ஒரு பேறுதான் என்பதை இதனை உணர்வுடன் வாசிக்கும் பொழுது நீங்கள் உணர்ந்து கொள்ள முடியும்.

-ஆசிரியர்-

அடியார்கள் இந்நூலை வாசித்து சந்நிதியான் திருவருளைப் பெறுவதற்கு வாழ்த்தும்.....


• RESIDENTIAL • COMMERCIAL • INDUSTRIAL

GTA

EXTRON ELECTRIC & PLUMBING LTD.

ELECTRICAL

- Complete Residential & Commercial Wiring
- Fuse to breaker panel upgrading 60A to 400A
- Knob & Tube Rewiring
- New & Relocated Electrical Distribution

PLUMBING

- Appliances Installation • In-floor heating systems
- New Construction Residential & Commercial
- Back flow preventer installer
- In-Ground & above-ground piping installations

Master Electrician Karan Tel: (416) 805 6144.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org